Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 01 ஞாயிற்றுக்கிழமை (17.09.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 292

தியாகி திலீபனது உருவப்படத்திற்கு சுடரேற்றி, மாலை அணிவித்து நினைவு நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார் தமிழீழத் தேசியத் தலைவர்.



## தியாகி திலீபனின் நினைவு நிகழ்வை தேசியத் தலைவர் ஆரம்பித்துவைத்தார்

கிளிநொச்சி, செப்.17

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக உண்ணா நோன்பு இருந்து தன்னுயிர் நீத்த தியாகி லெப். கேணல் திலீபனின் 19 வது நினைவு தின நிகழ்வுகளை விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நினைவுச்சுடர் ஏற்றி ஆரம்பித்து வைத்தார்.

வன்னியில் பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நினைவு தின ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், தியாகி திலீபனின் திருவுருவப்படத்திற்கு சுடரேற்றி, மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்.

தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் அமைதியை உருவாக்க முழு ஒத்துழைப்பு என்கின்றது ஐ.நா.

## ஜனாதிபதியிடம் கோபி அனான் நேரில் தெரிவிப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், ஐ.நா.பொதுச் செயலாளர் கோபி அனானும் சந்தித்தபோது...



ஹவானா, செப்ரெம்பர் 17

**இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் கோபி அனான், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் நேரில் தெரிவித்திருக்கிறார்.**

**மோதல்கள் இடம்பெறும் பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கான மனிதாபிமான உதவிகள் விடயத்தில் ஐ.நா. அதிக கரிசனை கொண்டுள்ளது என்றும் கோபி அனான் கூறியிருக்கின்றார்.**

அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்துகொண்டிருக்கும் ஜனாதிபுதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று ஐ.நா. செயலர் கோபி அனானைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்து ஜனாதிபதி மஹிந்தராஜபக்ச , கோபி அனானுக்கு விளக்கமளித்தார் என்று ஜனாதிபதி செயலகம் நேற்றுத் தெரிவித்தது.

தற்போது நடைபெறும் மோதல்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களைத் தடுப்பதற்கான படையினரின் தாக்குதல்களே தவிர போர் அல்ல என்று ஜனாதிபதி, ஐ.நா. செயலரிடம் எடுத்துக் கூறினார்.

மோதல்கள் நடைபெறும் பகுதிகளுக்குச் செல்வதற்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற தொண்டு நிறுவனங்களுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு,

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வரணியில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் நேற்று அடக்கம்

யாழ்ப்பாணம்,செப்.17

வரணி, இடைக்குறிச்சிப் பகுதியில் கடந்த ஓகஸ்ட் மாத நடுப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது கொல்லப்பட்ட மூன்று அப்பாவிப் பொதுமக்களின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டு , மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனையின் பின்னர், உரிய முறையில் அடக்கம் செய்யப்பட்டன.

கடந்த மாதம் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது வரணி, இடைக்குறிச்சிப் பகுதியில் உள்ள வீடொன்றின் மேல் வீழ்ந்த ஷெல்லினாலேயே இந்த மூவரும் உயிரிழந்தனர் என்று கூறப்படுகின்றது.

வரணி இடைக்குறிச்சிப் பகுதியைச்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## எமது நாட்டில் உள்ள பயங்கரவாதக் குழுவை அரசியல் சக்தியாக மாற்றுவதற்கு முயற்சிக்கிறேன்

### அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி மஹிந்த

ஹவானா, செப்.17

எமது நாட்டில் உள்ள பயங்கரவாதக் குழு அதிகூடிய அளவில் ஆத்திரமூட்டும் வகையில் வன்செயல்களில் ஈடுபட்டு வந்த போதிலும், அந்தக் குழுவை அரசியல் சக்தியாக மாற்றுவதற்கான முயற்சிகளில் நாங்கள் ஈடுபட்டு வருகின்றோம்.

அந்தக் குழு ஜனநாயக அரசியல் செயற்பாடுகளில் கலந்து கொண்டு நாட்டின் அரசுடனும் ஏனைய அரசியல் கட்சிகளுடனும் சமாதான வழியில் ஈடுபட வேண்டும் என்பதற்கான முயற்சிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றோம் - என்று கூறியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

கியூபாவின் தலைநகர் ஹவானாவில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பேச்சின் முக்கிய பகுதியின் சாராம்சம். வருமாறு:-

பயங்கரவாதமும் விடுதலைப் போராட்டமும் ஒன்றில் இருந்து மற்றது வேறுபட்டது. அவைக்கிடையே உள்ள வித்தியாசம் பூமிக்கும், வானத்துக்கும் இடையிலான வித்தியாசம் போன்றதாகும்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## கடல்வழிப் பயணத்தைத் தவிர்க்குமாறு மக்களிடம் அரசியல்துறை வேண்டுகோள்

கிளிநொச்சி, செப்.17

படையினர் பயணிக்கும் கப்பல் மூலம் பொதுமக்களை பயணம் செய்யவேண்டாம் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அறிவித்துள்ளதாக இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன.

இது தொடர்பாக இணையத்தளங்களில் வெளியான செய்தியில்:-

ஸ்ரீலங்காப் படையினர், மக்களை கேடயமாகப் பயன்படுத்தி தமது கடல் போக்குவரத்தினை மேற்கொள்வதால் குடாநாட்டு மக்கள் கடல்வழிப் போக்குவரத்து எதனையும் மேற்கொள்ளவேண்டாம்.

ஸ்ரீலங்கா கடற்படை யாழ். மக்களை கேடயமாகப் பயன்படுத்தி தங்களுடைய கடல்வழிப் போக்குவரத்து மற்றும் அதனூடான வளங்களை செய்துவருகின்றது.

எந்தவகையிலும் பாதுகாப்பு உறுதிப்பாடு வழங்கப்படாததாகவே கடல்வழிப் போக்குவரத்து உள்ளது.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தொண்டு நிறுவனப் பணியாளர் இருவரின் சடலம் நேற்றுத் தோண்டியெடுப்பு

திருகோணமலை,செப்.17

மூதூரில் படுகொலைசெய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்றின் 17 பணியாளர்களில் இருவரின் சடலங்கள் இரசாயனப் பகுப்பாய்வுக்கென நேற்று தோண்டி எடுக்கப்பட்டன.

மாதவராஜா கேதீஸ்வரன், முத்துலிங்கம் நர்மதன் ஆகியோரின் சடலங்களே இவ்வாறு தோண்டியெடுக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை உப்புவெளி

(08 ஆம் பக்கம் பார்க்க)



மேலதிக நீதிவான் முன்னிலையில் சடலங்கள் தோண்டும் பணி...

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாதாரங்கள் இன்றித் தவிக்கும் 22 ஆயிரம் மீனவர் குடும்பங்கள்

## சமாசத் தலைவர் தகவல்

நல்லூர், செப்.17

மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதால் குடாநாட்டில் உள்ள சுமார் 18 ஆயிரம் மீனவக் குடும்பங்களும் கடற்றொழில் சார்ந்த கூலித் தொழிலாளர்கள், மீன் வியாபாரிகள் என சுமார் 4 ஆயிரம் குடும்பங்களுமாக மொத்தம் 22 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் இன்று தமது வாழ்வாதாரங்களை இழந்து வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.தவரத்தினம் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த நிலையில், சமாசம் மீனவர்களுக்கு எந்தவகையில் உதவிகளை வழங்கியுள்ளது எனக் கேட்டபோது அவர்கூறியதாவது:-

கடந்த காலங்களில் சங்க உறுப்பினர்களுக்கு எம்மால் உதவக்கூடியதாக இருந்தது. இப்போது கடற்றொழிலாளர் சங்கத்தில் எவ்வித நிதிகளையும் வைப்பிலிடக்கூடியதாக அவர்களிடம் வருமானம் எதுவும் இன்மையால் சங்கம் அவர்களுக்கு உதவிகளை வழங்கக் கூடிய வாய்ப்புகள் அற்றுவிட்டன.

தற்போது வெளியாகும் செய்திகள் ஓரளவு நம்பிக்கை தருவதாக இருப்பதால், கடற்றொழிலாளர்கள் விரைவில் தமது தொழில்லை மேற்கொள்ளக்கூடிய நிலை ஏற்படும் என எதிர்பார்க்கின்றோம்.

இந்தச் சூழ்நிலையிலும் கூட சமாசம் கடற்றொழிலாளர்களுக்கு உதவுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ள யாழ். அரச அதிபர், படையதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகளைக் மேற்கொண்டுவருகின்றது - என்றார். (1-111)

## தாய்மார்களுக்கான கோன்சோயா தருவிக்க செயலகம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.17

யாழ். மாவட்டத்திலுள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் வழங்குவதற்காக கோன்சோயா கொழும்பிலிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதற்காக கொழும்பு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரின் அனுமதி கோரப்பட்டுள்ளதாக யாழ். செயலகம் தெரிவித்துள்ளது. சுமார் பதின்மூவாயிரத்து 329 கிலோ கோன்சோயா உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் யாழ். பிரதி மாகாண சுகாதாரசேவைப் பணிப்பாளர் அலுவலகம் மூலம் தெரியவந்தது. (ப-51)

## இடம்பெயர்ந்த மாணவர் மீட்டல் செய்ய வசதி

யாழ்ப்பாணம், செப்.17

யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள மாணவர்கள் இரவு நேரங்களில் தமது பாடங்களை மீட்டல் செய்வதற்கு வசதியாக இக்கல்லூரியின் அதிபர் இரண்டு வகுப்பறைகளை ஒதுக்கி வழங்கியுள்ளார்.

இதனைத்தொடர்ந்து இங்கு இரவு வேளைகளில் தங்கியுள்ள மாணவர்கள் இரவு 7மணி தொடக்கம் இரவு 8.30 மணிவரை தமது பாடங்களைச் சுயமாக மீட்டு வருகின்றனர்.

பெண்கள், ஆண்களுக்கெனவும் தனித் தனி இடங்கள் ஒதுக்கி வழங்கப்பட்டுள்ளன. இச்செயற்பாடுகளை இங்குள்ள குழுக்கள் கண்காணித்து வருகின்றன.

### பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் வழங்கிய தண்டனைக்கு எதிராக

# ஜெனிவா மனித உரிமைக் குழுவின் பணிப்புரையை ஏற்கமறுத்து நிராகரித்தது இலங்கை உயர் நீதிமன்றம்

கொழும்பு, செப்.17

தமிழர் ஒருவருக்கு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் ஐம்பது ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்து இலங்கை நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்பு தவறு எனத் தெரிவித்து, அவரை விடுதலை செய்து உரிய நஷ்டஈடு வழங்கும்படி அல்லது நீதியான மறுவிசாரணைக்கு உட்படுத்தும்படி ஜெனிவாவில் உள்ள சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு வழங்கிய பணிப்புரையை இலங்கை உயர் நீதிமன்றம் ஏற்க மறுத்து விட்டது.

ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்றம் இவ் விவகாரம்தொடர்பானதனது முடிவை நேற்றுமுன் தினம் அறிவித்தது.

நல்லதம்பி சிங்கராசா என்ற களுத்துறைச் சிறைச்சாலைக் கைதி தொடர்பாகவே இந்த முடிவு அறிவிக் கப்பட்டது.

1990 மே 11ஆம் திகதிக்கும் 1991 டிசெம்பர் 31ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் பொட்டு அம்மான் உட்பட ஏழு பேருடன் சேர்ந்து இலங்கை யின் சட்டரீதியான அரசை சட்டவிரோதமாகக் கவிழ்க்கவும், யாழ்ப்பாணம் கோட்டை, பலாலி, காங்கேசன்துறை படைமுகாம்களைத் தாக்கவும் திட்டமிட்டார் என இவர் மீது கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்கப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஐந்து குற்றங்களுக்கு குற்றவாளியாகக் காணப்பட்ட அவருக்கு ஒரு குற்றத்துக்கு பத்து ஆண்டுகள் என்ற அடிப்படையில் மொத்தம் ஐம்பது ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அதற்கு எதிராக அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார். அது நிராகரிக்கப்பட்டது.

பின்னர் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. அங்கும் அது நிராகரிக்கப்பட்டது. இந்த நிலையில் அவரது வழக்கு விடயம் குறித்து ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் ஆணையத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. பதின்மூன்று சர்வதேச ஆணையர்கள் கொண்ட ஆயத்தில் அங்கு அது விசாரிக்கப் பட்டது.

நல்லதம்பி சின்னராசாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்பட்ட விதம், நீதிமன்ற விசாரணைகள், மேன்முறையீடுகள் போன்றவற்றுக்கு இடையே வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டவை என்று கூறப்படும் காலதாமதங்கள், சட்ட மற்றும் நிகழ்வுக் குழப்பங்கள் போன்றவற்றை விலாவாரியாக விளக்கமாக - விசாரித்த சர்வதேச மனித உரிமைகள் ஆணையம் அவருக்கு எதிரான சிறைத் தீர்ப்பு முறையற்றது, நியாயமற்றது என்ற ஏகமனதான முடிவுக்கு வந்தது.

எனவே, அவரை உடன் விடுதலை செய்து அவருக்கு உரிய நஷ்டஈடு வழங்கும்படியும் அல்லது அவருக்கு எதிராக நீதி, நியாயமான மறுவிசாரணைக்கு உத்தரவிடும்படியும் அந்த ஆயம் இலங்கை அரசுக்கு பணிப்புரை விடுத்தது.

அந்த உத்தரவின் பின்னரும் தமக்கு நீண்ட காலமாக நியாயம் கிடைக்காத நிலையில் சர்வதேச ஆயத்தின் தீர்ப்பை மேற்கொள்காட்டி நல்லதம்பி சிங்கராஜா சார்பில் மீளாய்வு மனு ஒன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டது.

அந்த மனுவே நேற்றுமுன்தினம் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் நிஹால் ஜயசிங்க, நிஸங்க உடலகம, நிமால் திஸநாயக்க, நிமால் காமினி அமரதுங்க ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேற்படி மீளாய்வு மனுவைத் தள்ளுபடி செய்த பிரதம நீதியரசர் அப்போது கூறியதாவது:-

மனித உரிமைகள் தொடர்பான ஐ.நாவின் 1980 ஆம் ஆண்டின் பிரகடனத்தில் இலங்கை ஒப்பமிட்டுள்ளது என்பது வாஸ்தவம்தான். ஆனால், இலங்கையின் சட்ட நிர்வாகமும், நீதி நியாயாதிக்க நடவடிக்கைகளும் இலங்கையில் 1972ஆம் ஆண்டிலும், 1978ஆம் ஆண்டிலும் அரசமைப்புகளுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வேறு நாடோ, வேறு அமைப்புகளோ அதில் தலையிட்டு வழிநடத்த முடியாது. எனவே, இலங்கை அரசமைப்பின் கீழ் சட்டப்படி வழங்கப்பட்ட தீர்ப்பை, வேறு ஏதோ ஓர் அமைப்பின் வழிகாட்டுதலுக்கு அமைய மாற்றுவதற்கு முடியாது. அதற்கு இலங்கைச் சட்டங்களில் இடமில்லை. - எனவே இந்த மீளாய்வு மனுவைத் தள்ளுபடி செய்கிறோம்.

இலங்கையின் சட்ட ரீதியான உச்ச நியாயாதிக்கமுடைய அதிகார நீதிமன்றம் இந்த உயர் நீதிமன்றம்தான். அதை வேறு மன்றங்கள் வழிநடத்த முடியாது - என்றார் அவர்.(உ)

## மரண அறிவித்தல்கள்

### முத்துத்தம்பி சீரங்கம்



இலக்கணாவத்தை, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி சீரங்கம் நேற்றுமுன் தினம் (15.09.2006) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பியின் மனைவியும் சரஸ்வதி, காலஞ்சென்ற நல்லைநாதன் ஆகியோரின் சகோதரியும் அருந்தவரட்ணம் (கனடா), இராஜசேகரம் (ஜேர்மனி), தர்மராசா (கனடா), லிங்கம் (கனடா), காலஞ்சென்ற சிவகௌரி மற்றும் சித்தன் (கனடா), சிவபவான் (கனடா), சிவசேகரம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் பரஞ்சோதினி (கனடா), கலா (ஜேர்மனி), கெங்கா (கனடா), மாலா (கனடா), ஜெகதீஸ்வரன் (வவுனியா), அனுலா (கனடா), றஜனி (கனடா), பூர்மிளா (கனடா) ஆகியோரின் மாமியும் அரோனி, சைலா, அரோன், நிரோஜன், மிதுஷா, டயானா, சாரா, அபினா, மதுரன், அஸ்பின் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது பூதவுடல் 20.09.2006 புதன்கிழமை கனடாவில் உள்ள ரொறன்ரோ நகரில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே. 001 905 9480272
001 416 5581309
(57755)
தகவல்:
மு.சிவசேகரம்
[கனடா]

### நாகராசா கந்தசாமி

[அரச விறகு ஒப்பந்தகாரர்]



கந்தரோடை, உச்சாப்பனையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி தெற்கு மேலயப்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகராசா கந்தசாமி அவர்கள் 14-09-2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா - இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் மணிலாதேவியின் அன்புக்கணவரும். நாகராசா, நாகலிங்கம், நாகேஸ்வரன், ஈஸ்வரி, கணேசலிங்கம், பாலேஸ்வரன், அருளானந்தம், புலேந்திரன், சிவனேஸ் மற்றும் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் இன்று (17.09.2006) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணியளவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு : நா.கந்தசாமி,
மேலயப்புலம்,
அளவெட்டி தெற்கு.
(57761)
தகவல்:
நா.விநாயகமூர்த்தி (சகோதரர்),
பொ.திருச்செல்வம் (மருமகன்),
க.கணேசலிங்கம் (மகன்).

### சண்முகம் இரத்தினசிங்கம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் இரத்தினசிங்கம் அவர்கள் நேற்று (16.09.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் (இ.போ.ச நடத்துநர்) - திலகவதி தம்பதியரின் அன்பு மகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் ரேணுகா (பிரதேச செயலகம், வேலணை), ரமேஸ், ரஞ்சித்குமார், கோபி, ஷர்மிளா ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராணியின் அன்பு மாமனும் ஸ்வஸ்திகாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அம்பலவி மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை மேற்கு,
வேலணை - 7
(57769)
தகவல்
இ.ரமேஸ்(மகன்)

## மரண அறிவித்தல்

### செல்லையா தர்மராஜா

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் இல. 18, பெரேரா லேன், வெள்ளவத்தையில் வசித்தவருமான செல்லையா தர்மராஜா (உரிமையாளர், லீலா கொம்மினிக்கேசன், வெள்ளவத்தை) அவர்கள் 16-09-2006 சனிக்கிழமை மாலை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறியத்தரப்படும்.

18, பெரேரா லேன்,
வெள்ளவத்தை.
T.P.2559966
தகவல் :
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



### அருளப்பு றோக் அருளானந்தம் (அருள்)

அவர்கள் இறைபதமெய்தியமையால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

29/3, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.
(57754)
சிங்கநாயகர் குடும்பம்,
தாசன்தர்மா குடும்பம்.

## கண்ணீர் அஞ்சலி



16.09.2006 அன்று இறைபத[illegible]ந்த வேலணை மத்தி விவசாய சம்மேளனத் தலைவரும் வேலணை கமநல அபிவிருத்தி நிலைய செயற்குழு உறுப்பினருமான

### சண்முகம் இரத்தினசிங்கம்

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(57771)
வேலணை தெற்கு
விவசாய சம்மேளனம்.

## கண்ணீர் அஞ்சலி



"விழிகளில் என்றும் மறவா"
எனது ஞானத் தந்தை

### அருளப்பு றோக் அருளானந்தம் (அருள்)

அவர்கள் இறைபதமெய்தியமையால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

(57753)

[illegible] தொட்டமகன் A.சுரேஷ் குடும்பம்

## குடாநாட்டுச் சந்தைகளில் மரக்கறிகள் திடீர் விலையேற்றம்

யாழ். குடாநாட்டு சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளன. திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம், கல்வியங்காடு, யாழ்.நகர் போன்ற இடங்களிலுள்ள மரக்கறி சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் அதிகரித்துக் காணப் படுகின்றது.

கத்தரிக்காய், பாவற்காய், பயிற்றங்காய், கரட் போன்றவை ஒரு கிலோ 60 ரூபாவுக்கு அதிக விலைக்கு விற்கப்படுகின்றன.

தற்போது குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை மற்றும் மண்எண்ணெய்க்குத் தட்டுப்பாடு போன்ற காரணங்களினால் விவசாய நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இதனால் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்திருப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். (ப-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# கோலோச்சும் அரசபயங்கரவாதம்

இலங்கை அரசுப்படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழர்கள் - குறிப்பாக ஒன்றுமறியாத அப்பாவித் தமிழர்கள் - வகைதொகையின்றி கடத்தப்படுவதும், படுகொலை செய்யப்படுவதும், அவர்கள் வன்முறை அராஜகங்களுக்கு உட்படுத்தப்படுவதும் என தமிழர்களுக்கு எதிரான பயங்கரவாதம் மிகவும் மோசமான - குரூரமான - கட்டத்தை அடைந்திருக்கின்றது.

தலைநகர் கொழும்பில் பணக்கார வர்த்தகர்கள் கடத்தப்படுவதும் பல கோடி ரூபா பணத்துக்கு அவர்கள் பணயம் வைக்கப்படுவதும் சுளையாகக் கோடிகளைக் கறந்து கொண்டு அவர்களை விடுவிப்பதும் ஒரு வழக்கமாகிவிட்டது. இலங்கைத்தீவு பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுவிக்கப்பட்ட இந்த 58 ஆண்டுகளில் வன்முறைக் கலாசாரம் இப்படிக் கொடிகட்டிப் பறந்ததில்லை.

மரபுவழி இராணுவம் என்று கூறும் புலிகளை மாவிலாறில் அடித்துக்கலைத்துவிட்டோம், சம்பூரைக் கைப்பற்றிவிட்டோம், கொழும்பில் பயங்கரவாதிகள் வாலாட்டாமல் ஒட்ட நறுக்கிவிட்டோம் - என்றெல்லாம் இந்த அரசின் பிரதமர் முதற்கொண்டு சாதாரண அதிகாரி வரை வெற்றிப்பிரபலாபம் பாடுகிறார்கள்.

ஆனால் கொத்துக்கொத்தாக தமிழர்கள் கடத்தப்படுவதும், கோடிக்கணக்கில் பணயப் பணம் அறவிடப்படுவதும், தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதும் இந்த அரசுக்கு வெற்றிக்களிப்பு பாடும் அரசியல் வாதிகளுக்கும் தென்படவேயில்லை.

அதைத்தான் பாதுகாப்புச் செயலாளருக்கும், பாதுகாப்பு உயரதிகாரிகளுக்கும் நேரடியாக இடித்துரைத்திருக்கின்றார் தமிழ் எம்.பியான தி.மகேஸ்வரன்.

தமிழர்களுக்கு எதிரான திட்டமிடப்பட்ட இந்த வன்முறைக் கொடூரங்களுக்கு இந்த அரசும், பாதுகாப்பு உயரதிகாரிகளுமே பொறுப்பு என்று அவர் கூறியிருப்பது கவனிகத்தக்கது.

தமிழர் தாயகம் எங்கும் இன்று கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கும் - தமிழர்களுக்கு எதிரான - இனவிரோதக் கொடூரம் அரச பயங்கரவாத நடவடிக்கைதான்.

காலம் காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த அரச் பயங்கரவாதம் இன்று மிகக் குரூரமான - மிக மோசமான - மிகக் கொடூரமான - வடிவம் எடுத்திருக்கின்றது.

யாழ்.குடாநாட்டில் சந்திக்குச் சந்தி துருப்புக்கள் மலிந்திருக்க - ஊரடங்கு நேரத்தில் கூட - வெள்ளைவான் கும்பல் தங்குதடையின்றி தன் கைவரிசையைக் காட்டுகின்றது. வவுனியாவிலும் அதே நிலைமை தான்.

இந்தக் கொடூரங்களையும் அவற்றின் போக்குக்கு வழங்கப்பட்டிருக்கும் சட்டத்தில் எழுதப்படாத அனுமதியையும் பார்க்கும் போது - அவதானிக்கும் போது - தமிழர்களுக்கு ஒரு விடயத்தை உய்த்துணர முடிகின்றது.

தமிழர்களின் இன எழுச்சியை - உரிமைக்கான முழக்கத்தை - எந்த வழியைப் பயன்படுத்தியாவது அடக்குங்கள் என்ற பணிப்புரையின் கீழ் ஒரு தரப்புக்கு கட்டுமட்டில்லாத அதிகாரங்களும் கொடூரங்களுக்கான தங்குதடையற்ற அனுமதியும் வழங்கப்பட்டிருக்கின்றன என்பது தான் அது.

ஆனால், ஒளிவு மறைவாக வழங்கப்பட்டிருக்கக் கூடிய இந்த ஆணையின் உள்ளாந்தரத்தை, யதார்த்தத்தில் கொடூரமாக இடம்பெறும் நிகழ்வுகள் ஊடாக சர்வதேசமும் ஊகித்து உய்த்துணரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அரச முகவர் அமைப்புகளினால் ஆள்கள் காணாமல் போதல் மற்றும் அடையாளம் இல்லாமல் துடைத்தழிக்கப்படல் போன்ற கொடூரக் கலாசாரம் மீண்டும் தலைதூக்கியுள்ளதற்கான ஆதாரம் கிடைத்திருப்பதாக அண்மையில் லண்டனில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்து சுட்டிக்காட்டியிருக்கின்றார் சர்வதேச மன்னிப்புச் சபையின் தலைவர்.

கருணா அணி உட்பட அரச கொலைஞர் குழுவினால் தமிழர்களில் கணிசமான பகுதியினர் கொன்றொழிக்கப்படும் அபாயம் தீவிரமடைந்திருப்பதாக சர்ச்சைக்குரிய - 'மனித உரிமைகளுக்கான யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பு' - விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

"இலங்கை முழுவதும் ஆள்கள் கொல்லப்படுவது மற்றும் காணாமற் போவது போன்ற பயங்கரவாத செயல்களுக்கான அடையாளக் குறியீடாக இலக்கத்தகடற்ற வெள்ளை வான் மாறி வருகின்றது." - என ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்திருக்கின்றது. ஆள்கள் காணாமற் போன மற்றும் படுகொலையுண்ட சம்பவங்களுக்கு அரசசார்புக் குழுக்களே பொறுப்பு என்றும் அது குற்றம் சுமத்தியிருக்கின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசின் மனித உரிமை பேணல் தொடர்பான யதார்த்தச் செயற்பாடுகள் மோசமடைந்து, சர்வதேச ரீதியிலேயே இக்கொடூரங்களுக்கு எதிரான நியாயக் குரல் எழுந்துள்ள இச் சமயத்தில் -

இலங்கை அரசின் மனிதஉரிமை பேணல் தொடர்பான கொள்கை நிலைப்பாட்டிற்கு அதன் நீதிமன்றத் தீர்ப்பு மூலம் சர்வதேச பரிகாசம் ஏற்பட்டிருக்கின்றது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தை இலங்கை ஏற்றுக்கொண்டிருப்பதாக 1997 இல் இலங்கை ஜனாதிபதி விடுத்த அறிவிப்பு இலங்கை அரசமைப்புக்கு உட்பட்டதல்ல என்று உயர் நீதிமன்றம் அறிவித்துவிட்டது. அது மட்டுமல்ல மனித உரிமை மீறலுக்கு எதிராகவும், மனித உரிமைகளை சர்வதேச தரத்தில் பேணுவதற்காகவும் என்ற அடிப்படையில் ஜெனிவாவில் உள்ள ஐ.நா.மனித உரிமைகள் கமிட்டி வெளியிட்ட பணிப்புரை - சிபாரிசு - இலங்கை சட்ட முறைக்கு உட்பட்டதல்ல என்றும் உயர் நீதிமன்றம் பிரகடனப்படுத்திவிட்டது.

ஒரு புறம் மனித உரிமைகளை மோசமாக மீறி, ஆள்கடத்தல் கப்பம் அறவிடல், நீதிக்குப் புறம்பான கொலைகள், அராஜகங்கள் போன்ற வன்முறைகளில் அரச சார்புக்குழுக்கள் கொடூரமாக ஈடுபடுகின்றன என்று - 'அரச பயங்கரவாதம்' பற்றிய - குற்றச்சாட்டு இலங்கை அரசின்மீது சுமத்தப்பட்டிருக்கையில் -

மறுபுறம் மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பில் சர்வதேச நியதிமுறை இலங்கையைக் கட்டுப்படுத்தாது என்ற தீர்ப்பு இலங்கையின் அதி உச்ச நியாயாதிக்கமுடைய உயர் நீதிமன்றின் - அதிக நீதியரசர்களைக் கொண்ட - பிரதம நீதியரசர் உட்பட ஐந்து நீதியரசர்களைக் கொண்ட - ஆயத்தினால் வழங்கப்பட்டிருக்கின்றது.

அரச பயங்கரவாதத்துக்கு எதிரான சர்வதேச வினாக்களுக்கு விடையளிக்க வேண்டிய கடப்பாடு இலங்கை அரசுக்கு இல்லை என்ற நிலைப்பாடு சட்ட ரீதியாகவும் கிடைத்து விட்டது. இனி என்ன? அரச பயங்கரவாதம், மேலும் தடைகள் தாண்டி தன்பாட்டில் மென்மேலும் தீவிரமும், கொடூரமும், குரூரமும் அடைந்து கோலோச்ச வேண்டியது தான்.

## ஊரடங்கு அமுலில் இருந்தவேளை

# சோதனை எனக்கூறி வீட்டினுள் நுழைந்தோர் துப்பாக்கி முனையில் நகை, பணம், கொள்ளை

யாழ்ப்பாணம்,செப்.17

ஊரடங்கு அமுலில் இருந்தவேளை வீட்டைச் சோதனையிடப்போவதாகக் கூறி உள் நுழைந்தவர்கள் அங்கிருந்த நகைகள், பணம் என்பவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது..

நேற்றுமுன்தினம் இரவு சுண்டுக்குளிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவதினமிரவு 8 மணியளவில் குறிப்பிட்ட பகுதியில் வாகன நடமாட்டம் காணப்பட்டது என்றும்-

இதனைத் தொடர்ந்து இப்பகுதியில் உள்ள வீடுகளின் கதவுகள் தட்டப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதியில் உள்ள வீட்டிற்குள் நுழைந்தவர்கள் வீட்டை சோதனையிடப் போவதாகக் கூறியுள்ள னர். இதனைக்கேட்டு வீட்டிலிருந்தோரும் கதவைத் திறந்துள்ளனர். அவ்வேளை கைத்துப்பாக்கி, கத்தி மற்றும் வாள் என்ப வற்றுடன் வீட்டினுள் நுழைந்த பத்துக்கும் அதிகமானனோர் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர் என்றும் -

பின்னர் வீட்டிலிருந்தோரைப் பயமுறுத்தி ஓரிடத்தில் இருக்கும்படி கூறிவிட்டு நகைகள், பணம் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர் என்றும் கூறப்பட்டது.

இதேபோன்று சம்பவம் இடம்பெற்ற பகுதியில் உள்ள மற்றும் சில வீடுகளுக்கும் கொள்ளையர்கள் உள்நுழையவே வீட்டிலிருந்தோர் தகரங்களைத் தட்டி பெரும் சத்தத்துடன் கூக்குரலிட்டனர் என்றும் - இதனையடுத்து கொள்ளையர் அங்கிருந்து தப்பிவிட்டனர் என்றும் கூறப்பட்டது.

# மதுரை காமராஜர் பல்கலை எம்.ஏ. பட்டம் பெற்றோர்

மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்ட எம்.ஏ. பரீட்சையில் சித்திபெற்ற 24 பேரின் விவரம் வெளியாகியுள்ளது. அவர்களின் பெயர்கள் பின்வருமாறு:-

எஸ்.பிரணவநாதன், என்.புரட்சிதாசன், எம்.பற்றிக்டிறஞ்சன், ஆர். ராகுலநாயர், கே.லிங்கேஸ்வரன் எஸ்.ஸ்ரீநிவாசன், சுலோஜனி, ரி.விமலன், மஞ்சுளாதேவி, எஸ்.பிரகாசன், எஸ். யசோதரன், இந்திராவதி நல்லையா, பி.விஜேந்திரன், ரி. ஞானேஸ்வரி, ஆர்.சுலோசனா, எம். கடம்பேஸ்வரன். கே.கிரிதரன், வி.சிவசிதம்பரம், ஆர்.பகவதி, ஜே.ராஜசிங்கம், கே.பிராட்லிஜெனட், சி.ராமகிருஸ்ணன், வி.ஜயந்தி, ஏ.சாந்தன். (ப-203)

# வடமராட்சி பகுதிக்கான மினிபஸ்சேவை டீசல் இன்மையால் தடைப்படும் நிலை

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பாதையில் ஈடுபடும் மினிபஸ்களின் சேவை ஸ்தம்பிதமடையும் நிலை ஏற்படும் என அச்சம் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி பாதையில் சேவையிலீடுபடும் மினிபஸ்களுக்கு பருத்தித்துறை பிரதேச செயலரின் சிபார்சுக்கமைய தலா 15 லீற்றர் வீதம் டீசல் அண்மையில் வழங்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது டீசலைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் சேவைகளை நடத்தமுடியாத நிலை ஏற்படலாம் என வடமராட்சி சிற்றூர்திச் சேவைச்சங்கம் தெரிவித்துள்ளது. (173)

# வன்னி தொலைத்தொடர்பு நேற்று ஓரளவு சீரானது

கிளிநொச்சி,செப்.17

வன்னிக்கும் வெளியிடங்களுக்குமான தொலைபேசிச் சேவை நேற்று ஓரளவு சீரானது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள ரெலிக்கொம் நிறுவனத்தின் கோபுரத்தில் ஏற்பட்ட பழுது காரணமாக கடந்த 6ஆம் திகதிமுதல் வன்னிக்கும் வெளியிடங்களுக்குமான தொலைபேசிச் சேவை செயலிழந்திருந்தது.

கிளிநொச்சியில் உள்ள ரெலிக்கொம் நிறுவன ஊழியர்கள் திருத்த வேலைகளை மேற்கொண்டனர்.

இவர்களுக்கு மேலதிகமாக கொழும்பில் இருந்து வந்த தொழில்நுட்பவியலாளர்கள் மேற்கொண்ட திருத்தவேலையையடுத்து நேற்றுப் பிற்பகல் முதல் சேவை ஓரளவு சீரானது.

ஓரிருதினங்களில் முழுமையாகச் சேவைகள் சீராகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (1)

# தட்டுப்பாடான பொருள்கள் வீதியோரங்களில் தாராளம்

யாழ்ப்பாணம், செப்.17

யாழ். நகர் மற்றும் உள்ளூர் பகுதிகளில் இயங்கி வரும் தனியார் கடைகளில் அத்தியாவசியப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்ற போதிலும் யாழ். நகரிலுள்ள வீதியோரங்களில் மற்றும் சின்னக்கடை பொதுச் சந்தையின் முன்னால் உள்ள வீதியோரங்களில் இப் பொருள்கள் வியாபாரிகளால் விற்கப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தகரத்திலடைக்கப்பட்ட மீன், தீப்பெட்டி, புளி, உப்பு, பால்மா பக்கெட்டுக்கள், சீனி, அரிசி ஆகியவை பெருமளவில் இங்கு குவிக்கப்பட்டு உச்சவிலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (ப-51)

# மகாபொல கொடுப்பனவு இன்னும் வழங்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,செப்.17

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில் கொடுப்பனவுகள் இந்தாண்டுக்கு இதுவரை வழங்கப்படவில்லையென மாணவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

கடந்த மாதம் முதல் பல்கலைக் கழகம் இயங்கத் தொடங்கிய போதும் குறிப்பிட்ட கொடுப்பனவு வழங்கப்படாது இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

பல்கலைக்கழக நிர்வாகத்துடன் மாணவ மன்றப்பிரதிநிதிகள் தொடர்பு கொண்டு கதைத்த போதும் இன்னமும் பணம் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்று கூறப்படுகின்றது. (ப-68)

# மணல் அகழ்வு அதிகரிப்பு; தடுப்பவர்களுக்கு அச்சுறுத்தல்

தென்மராட்சி,செப்.17

மட்டுவில் சந்திரபுரம், சப்பட்டையன் கடல் பகுதியில் மணல் அகழ்வு அதிகரித்துள்ளது.

கட்டடப் பாவனைக்கு உதவாத மணல் வாகனங்களில் ஏற்றப்பட்டு வலிகாமம் பகுதிகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டுவருகிறது.

இப்பகுதியில் கடல்நீர் உட்புகாவண்ணம் இவ் வருடம் தடுப்பு அணை அமைப்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் பெருமளவு மணல் அகழ்ந்தெடுக்கப்படுவதால் கடல்நீர் உட்புகும் அபாயம் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தார்கள்.

மணல் ஏற்றுவதைத் தடுக்கச் செல்வோர் அச்சுறுத்தப்படுவதாகவும் தெரிவித்தனர். (ப-117)

# குடும்பத் தொடர்பு செய்தியினைப்பெறுவதற்கு இருபத்தேழு பேருக்கு செஞ்சிலுவை அழைப்பு

யாழ்ப்பாணம், செப்.17

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலகத்துடன் பின்வருவோரைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

120, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள மேற்படி அலுவலகத்தில் கிழமை நாள்களில் காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்கும் இடையில் கீழ்க்குறிப்பிடப்படுவோர் சமுகமளித்து தமது குடும்பத் தொடர்பு சம்பந்தமான செய்தியினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் - செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அறிவித்துள்ளது.

குடும்பத் தொடர்பு செய்தியைப்பெற அழைக்கப்பட்டோர் விவரம் பின்வருமாறு:-

தனபாலசிங்கம் கேதீஸ், (பாலசிங்கம் விடுதி, யாழ். பல்கலைக்கழகம்.)

சிவஞானம் சசிகுமார், (பாலசிங்கம் விடுதி, யாழ். பல்கலைக்கழகம்.)

கந்தசாமி மயூரதன்,( 3 ஆம் வருட கலைப்பீட மாணவன், யாழ். பல்கலைக்கழகம்.)

சிவலிங்கம் சிவரூபன் (2 ஆம் வருட முகாமைத்துவ மாணவன், யாழ். பல்கலைக்கழகம்)

குமாரசாமி பாலசுப்பிரமணியம், பாலசுப்பிரமணியம் கேமரஞ்சினி, பாலசுப்பிரமணியம் மஞ்சுதன் (மே/பா செல்வி நதீபா, கோணாவளை ஒழுங்கை, திருநெல்வேலி)

செல்வவிநாயகம் வனஜா (ஆனந்தகுமாரசுவாமி விடுதி, யாழ். பல்கலைக்கழகம்.)

சபாபதி செல்லம்மா (பனிப்புலம், அம்மன் சிலையடி, பண்டத்தரிப்பு.)

தினேஸ்குமார் தயாளினி (அராலி தெற்கு, செட்டியார் மடம் சந்தி.)

துரைசிங்கம் பத்மாவதி (கிளி) (சோமசுந்தரப்புலவர் ஒழுங்கை, நவாலி வடக்கு, மானிப்பாய்.)

[illegible] (5, [illegible] வீதி, யாழ்ப்பாணம்.)

[illegible] (2 ஆம் [illegible] மருத்துவ 'பீட மாணவி, யாழ். பல்கலைகழகம்.)

சூசைப்பிள்ளை செல்வராஜா (ஆச்சிரமம், கரையூர், யாழ்ப்பாணம்.)

குலசிங்கம், (211/3, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.)

அருள்தாஸ் யூடிற், (நெடுங்குளம், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.)

சந்திரியார் கிருபாகரன், (அம்மன் கோவில் வீதி, கொக்குவில் மேற்கு)

குணசிங்கம் குணசீலன் (2 ஆம் வருட கலைப்பீட யாழ். பல்கலைக்கழக மாணவன், கல்வியங்காட்டுச் சந்தி, யாழ்ப்பாணம்.)

பசுபதி நவரட்ணம் (45, பாரதிவீதி, நல்லூர் வீதி முன்பாக நல்லூர் அல்லது கச்சாய் தெற்கு, கொடிகாமம்.)

கோபாலசிங்கம் பாஸ்கரன் (நதுமி கூல்பார், யாழ். நகர்.)

மோகனதாஸ் செல்வறோகினி (அரியாலை, யாழ்ப்பாணம்.)

சண்முகரட்னம் சந்திரகுமாரி, (மே/பா இ.செந்தில்குமார் (இந்திரன்), கோவில் வீதி, யாழ்ப்பாணம்.)

வேலுப்பிள்ளை அருளம்பலம் ( அருளம்பலம் கெங்காதரன், நோயாளர், யாழ்.பொது மருத்துவமனை, யாழ்ப்பாணம்.)

அல்பிரட் கெமிலஸ் பெல்ஸான், (3 ஆம் வருட மருதனார்மடம் கவின் கலைக் கல்லூரி மாணவன் அல்லது கோவில் வீதி, யாழ்ப்பாணம்.)

நவரட்ணம் நந்தினி (யாழ்ப்பாணம்.)

கார்த்திகேசு குணசிங்கம் (மே/பா கே. மார்க்கண்டு, 40, அரசடி வீதி, நல்லூர்)

தவநாயகம் பிரசாந்தினி (மே/பா வி. பாலசிங்கம், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.)

நடராஜா ஜெனனன், (2 ஆம் வருட முகாமைத்துவ மாணவன், பாலசிங்கம் விடுதி, யாழ். பல்கலைகழகம்.)

விவேகானந்தம் துசியன், (பாலசிங்கம் விடுதி, யாழ். பல்கலைக்கழகம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எல்லா சிறப்புச் சந்தைகளிலும் நாடெங்கும் மருந்தகங்களிலும் விற்பனையாகின்றது.

Distributor Eastern Province
Main Street, Maruthamunai.
Tel: 077 3040623, 077 6180567

Sole Agents:
Seri Trading Company (Pvt) Ltd
Hotline: 0114810 251


### வழக்கம்பரை அம்மன் ஆலய நவராத்திரி விழா

வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலய நவராத்திரி விழா எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. தினமும் அம்பாளுக்கு விசேட பூசை வழிபாடுகளுடன் கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெறும். பத்தாவது நாளான விஜயதசமி யன்று வாழை வெட்டும் நிகழ்வு நடைபெறும். (28-203)


Earn a

**MEDICAL DEGREE**

FROM EASTERN EUROPE

Vitebsk State Medical University

Recognized by SLMC/ WHO/GMC-UK

**Recognized by the Sri Lanka Medical Council**




Conducted by : **Prof. Konstantin Boloboshko M.D., Ph.D.**
(Deputy head of admissions, Head of Surgery-Traumatology and Orthopedics)



**COLOMBO** - PATHE Academy 17th September @ 9 a.m.

- Visa clearance guaranteed in 2 weeks from the date of admission.
  Fly after 20 days from the admission date.
  Sponsorships, Bank statements, Visa interviews **NOT REQUIRED!**

**What you should bring for Spot Admission?**

- Passport copy or Birth certificate
- O/L & A/L certificates
- Students with pending A/L results should bring a letter from the principal, confirming they have sat for the exam.

- **The seminar will be followed by spot admission. To register for seminar, contact - 0773017883.**

**PATHE ACADEMY**
Overseas Student Placement Department
37, School Lane(Entrance from Duplication Rd) Colombo 03.
Tel:5377752, 2502012, 2591271


## சபிண்டீகரண அழைப்பு



நிகழும் வியவருடம் ஆவணி உஆம் நாள்
வெள்ளிக்கிழமை 18.08.2006 அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

அமரர்

### கெங்காதரம் காங்கேசன்

அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (17.09.2006) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மலர்வு: 01.03.1947
உதிர்வு: 18.08.2006

108/7, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(53750)

- குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



# சின்னத்தம்பி காராளசிங்கம்

(ஜப்பான்)

தோற்றம்
03.06.1945

மறைவு
10.10.2004

மெத்தையில் நாமுறங்க முள்ளில் தவமிருந்து - எம்மை
பெற்ற தெய்வமே!
உதிரத்தை உரமாக்கி உயர்வாக நாம்வாழ
உதிர்ந்த செல்வமே
அவையத்துள் முன்னின்று அற்புதமாய் நாம்சிறக்க - வாழ்வை
அர்ப்பணித்த தியாகியே!
உருவம் அழிந்தபோதும் உயிருக்குள் உதிரத்தில் உயர்வாக
கலந்து நினைத்த உறவே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல. 25, காரைக்காட்டு வீதி,
வண்ணார்பண்ணை.

- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னார்வப் பணியாளர்களின் படுகொலையும் கையைச் சுட்டுக்கொண்ட சம்பவங்களும்



பட்டினிக்கு எதிரான செயற்பாடுகளை (Action Against Hungry) மேற்கொள்ளும் பிரான்ஸைச் சேர்ந்த அரச சார்பற்ற அமைப்பின் மூதூர் பணிமனையைச் சேர்ந்த 17 ஊழியர்கள் கொலைசெய்யப்பட்டு ஆறுவாரங்கள் முடிவடைந்துள்ளன. ஒரு முஸ்லிம் பெண் ஊழியர் உட்பட 16 பெண் ஊழியர்களும் ஓர் ஆண் ஊழியரும் கொல்லப்பட்ட வர்களில் அடங்குவர்.

யாரால் என்ன காரணத்திற்காக இந்த அப்பாவி ஊழியர்கள் கொல்லப்பட்டனர் என்பது தொடர்பாக பல்வேறு வதந்திகள், குற்றச்சாட்டுகள் ஆகியன தொடர்ந்தும் வெளி யாகிவருகின்றன. இவற்றைத் தினமும் கேட்டவண்ணமும் வாசித்தவண்ணமும்உள்ளோம்.

எவ்வாறாயினும் இந்தப் 17பேரின் கொலையானது ஸ்ரீலங்கா அரசினதும் ஸ்ரீலங்கா ராணுவத்தினதும் பிரதிபிம்பத்தை ஓரளவுக்குப் பாதிப்பதாய் அமைந்துள்ளது. அரசு, விடுதலைப் புலிகள் மீது விரல்நீட்டி இந்தக் கொலைகளுக்கும் தங்களுக்கும் தொடர்பில்லை எனத் தெரிவித்துக் கொண்டிருக்கும் வேளையில் யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்களும் இந்த விடயத்தில் சிக்குண்டுள் ளனர். ஸ்ரீலங்கா யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவரான உல்ப் ஹென்றிக்சனால் இந்தக் கொலைக் குற்றச்சாட்டுகள் தொடர்பான பொறுப்பை அரசின் மீது சுமத்தி வெளியிடப்பட்டுள்ள அறிக்கையே இதற்குக் காரணமாகும். இதன் காரணமாக ஒரு புறத்தில் யுத்தநிறுத்த உடன்பாடு குறிப்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்களுக்கு எதிராக ஸ்ரீலங்காவில் ஒரு சில அரசியல் கட்சிகளாலும் அமைப்புகளாலும் மேற்கொள்ளப்பட்டுவரும் எதிர்ப்புகள் மேலும் தீவிரமடைந்து வருகின்றன. அதே நேரம் தன்னார்வ நிறுவன ஊழியர்களின் படுகொலைச் சம்பவமானது சர்வதேச மட்டம் வரை சென்று ஸ்ரீலங்கா அரசிற்குத் தற்போது சர்வதேச மனித உரிமை அமைப்பு, இணைத் தலைமை நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியனவற்றிற்குப் பதிலளிக்க வேண்

**தமிழில்: கஜனி**

டிய நிலை மையை உருவாக்கியுள்ளது.

அரச ராணுவமும் அரசும் இந்த 17பேரின் கொலை தொடர்பான பொறுப்பை விடுதலைப் புலிகள் மீது சுமத்தி அரச ஊடகங்கள் மூலம் தொடர்ந்து பிரசாரம் செய்துவருகின்றன. இந்தப் பிரசாரங்கள் இன்னமும் முடிவுறவில்லை.

2006 செப்ரெம்பர் 5 ஆம் திகதி புதன்கிழமை புதிய நிலைமைகளின்படி இந்தப் படுகொலைகள் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் அனுராதபுர நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. இந்த மாற்றமானது நீதவானின் தேவைகள் கருதியோ அல்லது பணிப்பின் பேரிலோ இடம்பெறவில்லை. பதிலாக நீதி அமைச்சின் செயலாளரின் பணிப்பின் பேரிலேயே இந்த மாற்றம் இடம்பெற்றுள்ளது.

### முரண்பட்ட தகவல்

ஸ்ரீலங்கா யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்சனின் அறிக்கை குறித்துக் கவ னம் செலுத்துவோமாயின் அந்த அறிக்கையில் அவரால் குறிப்பிடப்பட்ட முக்கிய விடயங்கள் குறித்துக் கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் இந்தப் படுகொலைகள் தொடர்பாக, பாதுகாப்பு நிலைவரம் தொடர்பான தகவல்களை வெளியிடும் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல வெளியிட்ட தகவல்கள் ஒன்றுக்கொன்று பொருந்தாமல் இருந்தன என்பதையும் கவனத்திற்கொள்ளவேண்டும். அரசின் ராணுவப்பேச்சாளரும் பாதுகாப்புத் தொடர்பான அமைச்சரவையின் பேச்சாளருமான அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல படுகொலைகள் இடம்பெற்ற இடத்திற்கு யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்கள் செல்வதற்கு அவ்வேளையில் போதுமான பாதுகாப்பு இருக்கவில்லை எனப் பல தடவைகள் தெரிவித்திருந்தார்.

இருப்பினும், 2006 ஒகஸ்ட் 5ஆம் திகதி அரசால் பத்திரிகையாளர்கள் மூதூருக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்களான தாங்கள் செல்லப் பாதுகாப்பு நிலைமை போதுமானதாக இல்லை எனத் தெரிவித்த அரசு ஊடகவியலாளர்களை அந்த இடத்திற்கு எவ்வாறு அழைத்துச் சென்றது என்பதே உல்ப் ஹென்றிக்சனின் வாதமாகும். அவரது இந்த வாதத்திற்கு அரசின் ராணுவப்பேச்சாளரோ அல்லது அரசைச் சேர்ந்த பொறுப்பான எவரோ இதுவரை திருப்தியான பதிலை வழங்கவில்லை. இம்மாதம் 2ஆம் திகதிய டெய்லி நியூஸ் பத்திரிகையில் அண்டிச்ண கூனுாடிஞதணனு பத்திரிகையை மேற்கோள் காட்டி வெளியான அறிக்கை ஒன்று பிரசுரமாகியிருந்தது. அந்த அறிக்கையில் எதுவித தடைகளுமின்றி இந்த ஊடகவியலாளர்களும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் அழைத்துச்செல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தப் படுகொலைகளுக்குப் பொறுப்பான தரப்பினர் தொடர்பாகத் தனக்கு மிக நம்பிக்கையான வட்டாரங்களி லிருந்து தகவல்கள் கிடைத்துள்ளன எனவும், தேவையேற் படின் அந்தத் தகவல்களை வெளியிடத்தான் தயாராயிருக்கிறார் எனவும் உல்ப் ஹென்றிக்சன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இருப்பினும், இந்த நிலைமைக்கு அப்பால் அரசு ஏன்செல்ல முயற்சிக்கவில்லை என்பது பிரச்சினைக்குரிய விடயமாகும்.

இதற்குப் பதிலாக யுத்தநிறுத்தக் கண்காணிப்பாளர்களின் கடமையானது அனுசரணையாளர் என்ற விதத்தில் தகவல்களைப் பரிமாறுவதே எனவும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் தனது எல்லையை மீறிச்சென்றுள்ளார் எனவும் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல குற்றஞ்சாட்டியுள்ளார்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு அரசின் செயற்பாடுகள் குறித்தோ ராணுவத்தினரின் செயற்பாடுகள் குறித்தோ விசாரணைகளை மேற்கொண்டு குற்றப்பத்திரங்

> **கடந்தமாதம் மூதூரில் மோதல்கள் இடம்பெற்றவேளையில் பட்டினிக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்பைச் சேர்ந்த 17 ஊழியர்கள் படுகொலைசெய்யப்பட்டனர். இந்தப் படுகொலைச் சம்பவம் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக முன்வைக்கப்பட்ட வாதவிவாதங்கள் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது. 'இருதின' வார இதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

களை முன்வைக்கவோ முடிவுக்கு வரவே உரிமையில்லை எனவும் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவும் ஜே.வி.பியினரும் விமர்சித்துள்ளனர்.

### குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்

அதேபோலவே அந்தப் 17பேர் எவ்வாறு படுகொலை செய்யப்பட்டனர், எந்தத் திகதியில் என்ன நேரத்தில் கொலை செய்யப்பட்டனர் என்பன தொடர்பான விடயங்கள் குறித்து சட்டவைத்திய அதிகாரியினாலும் நீதிமன்ற நடவடிக்கைகளின் மூலமும் மட்டுமே தீர்மானத்திற்கு வரமுடியும் என அரசு தெரிவிக்கிறது. இதுதொடர்பான தகுதி உல்ப் ஹென்றிக்சனுக்கு இல்லை என்பதால் இவ்வாறான தீர்மானத்திற்கு வரும் ஆற்றலோ அதிகாரமோ அவருக்கு இல்லை என அரசாங்கம் குற்றம்சுமத்தியுள்ளது.




'குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்' எனப் பழமொழி ஒன்றுள்ளது. ஊடகங்கள் மூலமோ அல்லது குறைகூறுபவர்களை விமர்சனம் செய்வதன் மூலமோ அரசு தான் நிரபராதி என்பதை ஒப்புவிக்கமுடியாது.

உல்ப் ஹென்றிக்சன் தனது அறிக்கையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் கிளைமோர் தாக்குதல்கள் இடம்பெறுவது மற்றும் கெப்பிட்டிக்கொல்லாவ பஸ் பயணிகள் படுகொலைச் சம்பவம் தொடர்பாகவும் தெரிவித்துள்ளார். யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விடயங்களை உரியமுறையில் ஆராய்ந்து அறியாமலும் விடுதலைப் புலிகளுக்குச் சார்பாகவும் [மூதூரில் 17ஊழியர்களின் படுகொலை] செயற்படுவதாக இம்மாதம் முதலாம் திகதி பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் அரசுப் பேச்சாளர் குற்றம் சுமத்தியிருந்தார். அவ்வாறெனில், கெப்பிட்டிக்கொல்லாவ தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் மீது யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு நேரடியாக ஏன் குற்றம் சுமத்தியுள்ளது என பி.பி.ஸி. சார்பில் உரையாடியவர் கேட்டபோது அதற்குத்திருப்தியானபதிலை அரசுப்பேச்சாளரால்வழங்கமுடியவில்லை.

மூதூர்ப் படுகொலைகள் இடம்பெற்ற ஒகஸ்ட் 4ஆம் திகதியிலிருந்து இதுவரை விடுதலைப் புலிகளும் அரசும் குறிப்பிடும் முக்கியமான விடயம் என்னவெனில், கடந்த ஒகஸ்ட் 3ஆம் [illegible] பாட்டின் கீழ் இருந்தது என்பது [illegible] அநுராதபுர சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கையின்படி இந்தக் கொலைகள் கடந்த ஒகஸ்ட் மாதம் 3ஆம் திகதி அல்லது 4ஆம் திகதி அதிகாலையே இடம்பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த ஒகஸ்ட் 3ஆம் திகதி [வியாழக்கிழமை] அமைச்சர் அனுர பிரயதர்சன யாப்பா தலைமையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, மூதூர் ஸ்ரீலங்கா ராணுவத்தினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ளதாகத் தெரிவித்தார். மூதூர் நகரில் தங்கியுள்ள சிறிய எண்ணிக்கையிலான விடுதலைப் புலிகளைத் தேடிப் பிடிக்கும் நடவடிக்கைகளை ராணுவத்தினர் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் விடுதலைப் புலிகள் மூதூர் பொலிஸ்நிலையத்தையும் மூதூர் ராணுவ முகாமையும் கைப்பற்றிவிட்டனர் எனக் கூறப்படுவது பொய் எனவும் தெரிவித்தார்.

அமைச்சரின் இந்தப் பத்திரிகையாளர் மாநாடு பற்றிய தகவல்கள் இந்நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், ஆங்கிலப் பத்திரிகைகளிலும் இலத்திரனியல் ஊடகங்களிலும் வெளியாகின.

இருப்பினும் தற்போது அமைச்சர் ரம்புக்வெல்லவினதும் அரசினதும் பிரதிபிம்பத்தை காப்பாற்ற முயற்சித்துவரும் சட்டத்தரணிகளான எஸ்.எல்.குணசேகரா [ஹெல உறுமய] மற்றும் கோமின் தயாசிறி போன்றவர்கள் ஒகஸ்ட் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை மூதூர் நகரம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது என மீண்டும் மீண்டும் தெரிவித்து வருகின்றனர். [குற்றவியல் வழக்குகள் தொடர்பான திறமைமிக்க சட்டத்தரணிகளான இந்த இருவரும் இவ்வாறு கூறி வருகின்றனர்] 04.09.2006 ஆம் திகதிய 'தினமின' பத்திரிகையில்வெளியான கட்டுரையில் புகழ்பெற்ற இந்த இரு சட்டத்தரணிகளும் மூதூர் நகரை அரசபடைகள் மீண்டும் ஒகஸ்ட் 5 ஆம் திகதியே கைப்பற்றின எனக் குறிப்பிட்டுள்ளனர். ஒகஸ்ட் 3ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற்ற அரசின் ஊடக மாநாட்டில் அரசின் ராணுவப் பேச்சாளரும் கலந்து கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### யுத்த உணர்வுக் காய்ச்சல்

யுத்த உணர்வுகள் என்ற காய்ச்சலால் பீடிக்கப்பட்டுக் பின்னர் காய்ச்சல் சன்னி சுரமாக மாறிய நிலைக்குள்ளான ஹெல உறுமயவினரும் ஜே.வி.பியினரும் அவர்களுடன் கூடியுள்ள அமைப்புகளும் அரசபடைகள் மூதூர் நகரை ஒகஸ்ட் 5 ஆம் திகதியே கைப்பற்றின எனக் கூறிவருவது ஒருபுறத்தில் அவர்களைப் பொறுத்தவரையில் சரியே. அது அரசைக் காப்பாற்றும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

ரகசியப் பொலிஸாரின் அறிக்கையில் [ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் மேற்கொள்ளப்பட்ட] ஒகஸ்ட் 2-5 ஆம் திகதிவரை மூதூர் நகரம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார் என அரச சார்பு ஊடகமான தினமின பத்திரிகையின் 31.08.2006 பதிப்பின் முதற்க்கத்தில் செய்தி வெளியாகியிருந்தது.

தன்னார்வ அமைப்பு ஊழியர்களின் படுகொலை தொடர்பான மர்மங்களைத் துலக்கும் விடயத்தில் அரசின் அர்ப்பணிப்புக் குறித்து தனக்குப் பிரச்சினை உள்ளது என மாற்றுக் கொள்கை மையத்தின் பணிப்பாளர் பாக்கியஜோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம், இணைத் தலைமை நாடுகள் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் ஆகியனவற்றிற்கு ஸ்ரீலங்கா அரசு முகங்கொடுக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒகஸ்ட் 31 ஆம் திகதிய 'தினமின' பத்திரிகையில் பிரசுரமான அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவின் கருத்துப்படி இந்தப் படுகொலைகளை மூடி மறைக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை. எனவேதான் ஆஸ்திரேயாவைச் சேர்ந்த மருத்துவ வல்லுநர் குழுவை அழைப்பதற்குக் கூட அரசு ஆர்வம்காட்டியுள்ளது என அமைச்சர் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் மரணமானவர்களின் உறவினர்களுக்கோ அல்லது பெற்றோருக்கோ எதுவித கொடுப்பனவுகளையோ நட்டஈட்டையோ வழங்கப்போவதில்லை என பிரான்ஸைச் சேர்ந்த அந்த அரச சார்பற்ற நிறுவனம் தெரிவித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. விசாரணைகள் இதுவரை முற்றுப்பெறவில்லை என்பதே அந்த அமைப்பினர் தரும் விளக்கமாகும். அதேபோல படுகொலைசெய்யப்பட்டவர்கள் தொடர்பான மரணச் சான்றிதழ்களை வழங்க அரசு இதுவரை முயற்சிகளை எடுக்கவில்லை. பட்டினிக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்பைச் சேர்ந்த அப்பாவி ஊழியர்கள் 17பேரின் துரதிர்ஷ்டமான மரணம் தொடர்பான சம்பவத்தில் அரசே கையைச் சுட்டுக்கொண்ட பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகக் கூறமுடியும். ★

# ஜேர்மனியில் பல்வேறு இடங்களில் கவனஈர்ப்பு நிகழ்வு தொடர்கிறது

## ஈழவேந்தன் எம்.பியும் பங்கேற்பு

ஜேர்மனி, செப். 17

இலங்கையில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் அரச, இராணுவ வன்முறைகளைக் கண்டித்து ஜேர்மனியில் புலம்பெயர்ந்துள்ள ஈழத்தமிழர்களினால் ஜேர்மனியின் பல்வேறு இடங்களிலும் 25ஆவது நாளாக தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த வியாழன் ஜேர்மனியின் வட மத்திய மாகாணத்திலுள்ள ஒஸன்புறுக் நகரில் கவன ஈர்ப்புப் போராட்டம் நடந்தது. ஈழத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் தமிழர் கொலைகளை சித்திரிக்கும் புகைப்படங்கள், செஞ்சோலை சிறுவர் இல்லம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பான காட்சிப்படங்கள் என்பன மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

நிகழ்வில் கலந்துகொண்டோருக்கு ஜேர்மன் மொழியிலான துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தனும் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டார். இந்தப் போராட்டம் ஜேர்மனியில் இன்னும் சில தினங்களுக்குத் தொடர்ச்சியாக நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (த)

# தமிழகத்துக்கு 202 அகதிகள்

சென்னை, செப். 17

இலங்கையைச் சேர்ந்த 202 ஈழத்தமிழ் அகதிகள் அங்கிருந்து தனுஷ்கோடி கடற்பகுதியை புதன் மற்றும் வியாழக்கிழமையில் வந்தடைந்தனர்.

திருகோணமலை, வவுனியா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 40 குடும்பங்களைச் சேர்ந்த 155 பேர் கடந்த புதனன்றும் -

திருகோணமலை, மன்னார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 15 குடும்பங்களைச் சேர்ந்த 47 பேர் வியாழக்கிழமையும் -

தனுஷ்கோடி கடற்கரைப் பகுதியை வந்தடைந்தனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து அண்மைக் காலமாக தமிழகம் வந்தடைந்த ஈழத் தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 13ஆயிரத்து 642 ஆக உயர்ந்துள்ளதாக தமிழகச் செய்திகள் மேலும் தெரிவித்தன.


### இதயம் நெகிழ்ந்த அஞ்சலி



வலி.கிழக்கு பிரதேச கலாச உத்தியோகத்தரும், எமது சக அலுவலருமான திருமதி மாலினி கிருஸ்ணானந்தன் அவர்களின் பாசமிகு தந்தை

**சின்னப்பு இராமலிங்கம்**

இறைபதம் அடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த கவலை அடைந்தோம். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் நாம் அவரது பிரிவுத் துயரிலும் பங்குகொள்கின்றோம்.

யாழ்ப்பாணம். கலாசார உத்தியோகத்தர்கள்.

### 10ஆம் ஆண்டு நினைவலைகள்

செல்வி சுதந்தரி திருஞானசம்பந்தமூர்த்தி

தோற்றம் 09.10.1975 — உதிர்வு 17.09.1996

கண்ணீரும் கம்பலையுமாக காலமெல்லாம்
நான் வாழவேண்டும் என்பதற்காவா வெடா
நீ என்னை விட்டுப் பிரிந்தாய்
அம்மா!

314, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (53764)

அபலை அப்பன்,
சோ.திருஞானசம்பந்தமூர்த்தி

### பாக்யா இசைப் பயிலகம்

மணியர்பதி வீதி, கொக்குவில் மேற்கு

02.10.2006 திங்கட்கிழமை விஜயதசமியாகிய நன்நாளில் இசை, இசைவாத்திய வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

- மிருதங்கம்
- வயலின்
- ஓகன்
- புல்லாங்குழல்
- வாய்பாட்டும், பண்ணிசையும்.

**இன்று முதல் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.**

தொடர்பு: பார்யா காகிதாதிகள்
121, கே.கே. எஸ்.வீதி, கொக்குவில்.


### பின்னுறுதித் தீர்வை

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

முத்துக்கிருஸ்ணபிள்ளை நாகேஸ்வரன்
இல. 391, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
வழக்காளி

வழ.இல.மணநீக்கம்/673 எதிராக

1. முத்துக்கிருஸ்ணபிள்ளை நாகேஸ்வரன்
பெண் சிவனேஸ்வரி
இல.68 விஜய வீதி, 156ஆம் கட்டை, கண்டி வீதி, கிளிநொச்சி.
2. முத்துக்கிருஸ்ணபிள்ளை குமரன்
10/1, பெரியதம்பிரான் கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

எதிராளிகள்

இவ்வழக்கு 2006ஆம் ஆண்டு ஆவணி மாதம் 29ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ.த. விக்னராஜா அவர்கள் முன்னிலையில் வந்தபோது வழக்காளியும் வழக்காளி சார்பில் பதிவுபெற்ற சட்டத்தரணி எஸ்.ஏ.ஈ ஏகநாதன் அவர்களும் பிரசன்னமாயிருக்க இவ்வழக்கில் 1ஆம் எதிராளிக்கு அழைப்புக்கட்டளை 23.07.2006 ஆம் திகதிய ஈழநாடு பத்திரிகையிலும்,27.07.2006ஆம் திகதிய ஈழநாதம் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டு. இவ்வழக்கு 2.8.2006ஆம் திகதி மன்றில் கூப்பிடப்பட்டபோது 1ஆம் எதிராளி சமுகம் அளிக்காமையால் பின் 7.8.2006ஆம் வழக்காளியின் சட்டத்தரணி பிரேரணை அணைத்து ஆதரிப்பதற்காகக் கூப்பிடப்பட்டபோது அழைப்புக்கட்டளை பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைகளின் பிரதிகள் அணைக்கப்பட்டபோது 2.8.2006இல் எதிராளி சமுகமின்மையால் இன்று ஒருமுக விளக்கத்திற்கு நியமிக்கப்பட்டதற்கு அமைய வழக்காளியின் பதிவுபெற்ற சட்டத்தரணி எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் அவர்கள் வழக்காளியின் சாட்சியத்தை நெறிப்படுத்த மன்றின்அனுமதியைக் கோரி மன்றின் அனுமதியுடன் வழக்காளியின் சாட்சியம் நெறிப்படுத்தப்பட்ட பின்னர் வழக்காளியின் பிராதுவ1 ஆவணம் வழக்காளி இன்று மன்றில் அளித்த சாட்சியம் ஆகியவற்றை வழக்கேட்டுடன் சேர்த்து மன்று பரிசீலித்து வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களை பெறத் தகுதியுடைவர் எனக் கண்டு பின்வருமாறு கட்டளையிட்டு தீர்ப்பளிக்கப்படுகின்றது.

1ஆம் எதிராளிக்கும் 2ஆம் எதிராளிக்கும் இடையிலான சோர உறவின் அடிப்படையிலும் 1ஆம் எதிராளியின் அமைவு வழி வன்முறை கைவிடல் அடிப்படையிலும் 1ஆம் எதிராளி குற்றவாளி என்ற அடிப்படையில் வழக்காளிக்கும் 1ஆம் எதிராளிக்கும் இடையில் 1996ஆம் ஆண்டு ஆடி மாதம் 5ஆம் திகதி நடைபெற்ற பதிவுத் திருமணத்தை இத்தால் ரத்துச் செய்து வெற்றும் வெறிதுமானதெனக் கட்டளையிட்டுத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இப்பின்னுறுதித் தீர்வையின் பிரதி உதயன், ஈழநாதம் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தல் மூலம் 1ஆம் எதிராளிக்கு பதில் சேவகம் செய்ய... ட்ட திகதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் 1ஆம் எதிராளி எதுவித நடவடிக்கையும் எடுக்கத் தவறும் பட்சத்தில் விதிக்கப்பட்ட காலம் முடிவடைந்ததும் இப்பின்னுறுதித் தீர்வையானது முற்றான தீர்வையாக்கப்படுமென கட்டளையிடப்படுகின்றது.

2006ஆம் ஆண்டு ஆவணி மாதம்.29ஆம் திகதி

நீதிமன்றக்கட்டளைப்படி
து.சிறிமோகன்.
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம். யாழ்ப்பாணம்.

வரைந்தது
வழக்காளியின்சட்டத்தரணி. (53753)

# காலபோக செய்கைக்கு விவசாயிகள் ஆயத்தம்

தென்மராட்சி, செப்.17

கடந்த வாரம் பெய்த மழையையடுத்து வடமராட்சிப் பகுதியில் காலபோக நெற் செய்கைக்கான ஆரம்பக்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நெல்வயல்களில் வரம்பு கட்டுதல், குப்பைகள் பறித்தல், உழவுசெய்தல் போன்ற வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை காணமுடிகிறது. (ப-117)

# நலன்புரி நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

தென்மராட்சி, செப்.17

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் பதினொன்றாக அதிகரித்துள்ளன. இந்த நிலையங்களில் 253 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 13 பேர் தங்கியுள்ளனர்.

கடந்த மாதம் பதினொராம் திகதி பிரதேசத்தில் இடம்பெற்ற எறிகணைத் தாக்குதலையடுத்து 16 நலன்புரி நிலையங்கள் இயங்கியதாகவும், பின்னர் இவற்றில் ஏழு நிலையங்கள் மூடப்பட்டு ஒன்பது நிலையங்கள் இயங்கியதாகவும்,

அண்மையில் கொடிகாமம் பகுதியில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததையடுத்து கொடிகாமம், மிருசுவில் ஆகிய பகுதியைச் சேர்ந்த குடும்பங்கள் மந்துவில் பகுதிக்கு வந்ததையடுத்து இரு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மழைகாலம் ஆரம்பிக்கவுள்ளதால் மழை வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்படக்கூடுமென கருதும் நிலையங்களை மாற்றுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ப-117)


**மனோகரா யாழ்ப்பாணம்**

டிஸ்யூம் புகழ் ஜீவா, கோபிகா, மோகன்லால், பிரகாஷ்ராஜ் மற்றும் பலர் நடித்த



**அரண்**

காட்சி நேரம் (53766) 10.30 மட்டும்.

### விட்டுப்பாவனைப் பொருள்கள் விற்பனை

17/3, கோணாவளை வீதி, கொக்குவில் கிழக்கில் 8 லாச்சி மேசை, குளிர்சாதனைப்பெட்டி உட்பட வீட்டுப்பாவனைப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
எஸ். தருமலிங்கம்
(53757)

### வீடு வாடகைக்கு தேவை

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டதாக சிறிய அரச ஊழியர் குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புக்கு: 021-222 3772
கேசவன்,
55, சீனியர் லேன், யாழ்ப்பாணம்.
(53748)

### கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 12 SRI XXXX இலக்கமுடைய நீலநிற Nissan Sunny Car உடன் விற்பனைக்கு உண்டு. விலை 175,000/=.

தொடர்பு:
42/7, ஈச்சமோட்டை கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
நீகல் வீடியோ. தொ.பே 021 222 2896
(53765)

### விற்பனைக்கு

P4 கணனி மற்றும் பாகங்கள், இலத்திரனியல் சாதனங்கள், தொலைத்தொடர்பகப் பொருள்கள் விற்பனைக்கு.

**81, பலாலி வீதி, கந்தர்மடம்.**
(53768)

### சைக்கிள் கண்டெடுக்கப்பட்டுள்ளது

கடந்த புதன்கிழமை (13.09.06) கொழும்பு கப்பலில் செல்லும் பயணிகளால் ரயில்வே கடவைக்கு அருகிலுள்ள ஒழுங்கையில் விடப்பட்ட லேடிஸ் சைக்கிள் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்.

**வீடியோ சனா**

389, இராமலிங்கம் றோட், திருநெல்வேலி வடக்கு. [ஞானவைரவர் சோலைக்கு முன்பாக]
(53762)


# பிரபாகரன் உத்தரவாதம் தந்தால்தான் அமைதிப்பேச்சுக்கு அரசு இணங்குமாம்

கொழும்பு, செப். 17

விடுதலைப் புலிகள் வன்முறைகளைப் பூரணமாகக் கைவிடுவர் என்று புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் எழுத்துமூலம் உத்தரவாதம் தந்தால் மாத்திரமே அவர்களுடன் பேச அரசு இணங்கும் என அரச உயர் வட்டாரங்கள் நோர்வேத் தரப்புக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றன என்று கொழும்பிலுள்ள ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

இலங்கைக்கான நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கருடன் அரச பிரதிநிதிகளான அமைச்சர் ஸ்ரீபால டி சில்வா, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எம்.எம்.ஜி.எஸ்.பலிகக்கார ஆகியோர் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினர்.

அந்தச் சந்திப்பின்போதே அரசுத் தரப்பின் இந்த நிலைப்பாடு தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது என்று அந்த ஊடகம் தனது செய்தியில் குறிப்பிட்டிருக்கிறது. புலிகளின் தலைவர் பிரபாகரனிடமிருந்து எழுத்துமூலமான உத்தரவாதம் கிடைக்காதவரை புலிகளுடன் பேச்சுக்குச்செல்வது அர்த்தமற்றது என்றே அரசு கருதுகின்றது என்று நோர்வேத் தூதுவரிடம் அமைச்சர் நிமால் கூறினார் என்று தெரிய வருகிறது.

இது ஒருபுறமிருக்க, பேச்சுக்கு ஒப்புக்கொண்டதன் பின்னர் விடுதலைப் புலிகள் ஒரு துப்பாக்கிச் சூடு நடத்தினால்கூட அரசு பேச்சிலிருந்து விலகிவிடும் என்று பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்திருக்கிறார். இப்படி அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (த)


### குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு

- ★ திருமணம் (அலங்காரத்துடன்)
- ★ சுற்றுலா ★ விசேட வைபவங்கள்

போன்ற அனைத்து தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம். (48465) (24)



தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை
22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குழி. யாழ்ப்பாணம்

T.P.: 0777-903090
0777 246117

### தேவை வைத்திய தாதி

வடக்கு/கிழக்கு [இலங்கை] புற்றுநோய் உதவி நிறுவனத்தாரின் [CANE-UK] யாழ். புற்றுநோயாளர் காப்பகத்திற்கு அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றி ஓய்வு பெற்ற அல்லது அரசினர் தாதிப்பயிற்சிக் கல்லூரியில் பயின்று தராதரப் பத்திரம் பெற்றவர்கள் உடன் விண்ணப்பிக்க முடியும். உடன் தொடர்புகொண்டோ அல்லது காப்பகத்திற்கு தினசரி காலை 10-12 இற்கு இடையில் சமுகமளித்தோ [சனி, ஞாயிறு தவிர] விண்ணப்பிக்கலாம்.

**தொலைபேசி 021 4591401**

**நிர்வாகம்,**
**கேன் புற்றுநோயாளர் காப்பகம்,**
**சபாபதிப்பிள்ளை வீதி,**
**உடுவில் சுன்னாகம்.**
(கே.கே.எஸ். வீதியில் இராமநாதன் கல்லூரி தாண்டி றொட்டியாலடியில் விசாரிக்கவும்)
(53770)


### துயர்பகிர்கின்றோம்



எமது சங்கத்தின் செயலாளர்
திருமதி யசோதா உதயகுமார்
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி சுகிர்தமலர் தில்லையம்பலம்**

அவர்களின் பிரிவால் துயருறுகின்றோம். இவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக அளவெட்டி கும்பழாவளை விநாயகனை இறைஞ்சுகின்றோம்.

அளவெட்டி. (53758) அளவெட்டி மத்தி மகாஜன சபை மாதர் சங்கம்.


### கௌரி நோன்பு விரதகாரர்களுக்கு முக்கிய அறிவித்தல்

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் விரதாரம்பம் 02.10.2006 திங்கட்கிழமை ஆகும். கௌரி நூல் பெறும் அடியவர்களும் உபயம் செய்பவர்களும் 02.10.2006 இற்கு முன்பாக பணம் கட்டி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

(53763) ஸ்ரீலஸ்ரீ சி.செல்வராசக்குருக்கள்.


### துயர் பகிர்வு

எமது அலுவலகத்தில் கடமையாற்றும் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வெ.சுப்பிரமணியம் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி வெள்ளைத்தம்பி வெள்ளையம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது அலுவலகச் சமூகத்தின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம். (53699) பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரும், உத்தியோகத்தர்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியற்கல்லூரி டிப்ளோமாதாரிகளில் அறுபத்தேழு பேருக்கு ஆசிரியர் நியமனம்

யாழ்ப்பாணம், செப்.17

தேசியக் கல்வியியற் கல்லூரியின் டிப்ளேமாதாரிகளில்67பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ். வலயங்களுக்கு நியமனம் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

***கிளிநொச்சி***- கோகிலவாணி காசிநாதர் (விடத்தற்பளை, மிருசுவில்) சங்கீதம் -வட்டக்கச்சி மகாவித்தியாலயம்.

***மன்னார்***- லதா தம்பி(இடைக்காடு, அச்சுவேலி)-கணிதம்- புனித லூசியாஸ் றோ.க.த.க.பாடசாலை.

***யாழ்ப்பாணம்***- தீபா சிவயோகம் (வாரியப்புலம், சுன்னாகம்)- உடற்கல்வி - கொக்குவில் இந்துக் கல்லூரி.

***வலிகாமம்***- ஜெயாந்தினி கனகலிங்கம் (புன்னாலைக்கட்டுவன் தெற்குச்சந்தி, புன்னாலைக்கட்டுவன்)- உடற்கல்வி- புன்னாலைக்கட்டுவன் அ.த.க. பாடசாலை, சேந்தினி விஸ்வலிங்கம் (வேரவில், இளவாலை வடக்கு)- உடற்கல்வி- இளவாலை கன்னியர்மடம் வித்தியாலயம், சுபாதனி பாலசிங்கம் (கும்பழாவளை மேற்கு, அளவெட்டி மத்தி)-நூலக விஞ்ஞானமும் தகவல் தொழிநுட்பமும்- அளவெட்டி அருணோதயக் கல்லூரி, நிதர்னி பாலசிங்கம் (சித்தாவத்தை, உடுவில் வடக்கு)- நூலக விஞ்ஞானமும் தகவல் தொழிநுட்பமும்- பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி.

***வடமராட்சி***- தர்சினி வைரமுத்து (குடத்தனை மேற்கு, குடத்தனை)- ஆரம்பக்கல்வி ஆழியவளை றோ.க.த.க., நளினி பசுபதி (ஆழியவளை, தாழையடி)-கணிதம்- ஆழியவளை றோ.க.த.க., கணபதிப்பிள்ளை திரவியகுமார்(வத்திராயன் தெற்கு, தாழையடி)- நூலக விஞ்ஞானமும் தகவல் தொழிநுட்பமும்- உடுத்துறை மகா வித்தியாலயம், கவிதா நடராஜா(இந்துக் கலவன் பாடசாலை வீதி, வல்வெட்டி)-ஆரம்பக்கல்வி- நாகர் கோவில் வித்தியாலயம்,.

***தீவகம்***- தமிழ்ச்செல்வி மின்காந்தவேல் (பொன்னம்பலம் வீதி, காரைநகர்)-ஆரம்பக் கல்வி- அனலைதீவு தெற்கு அ.த.க. வித்தியாலயம், சிவஜனனி ஸ்ரீஜெகநாதன் (சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்)-ஆரம்பக் கல்வி - நெடுந்தீவு மகா வித்தியாலயம், சந்திரவதனா அப்புத்துரை (குருக்கள் கிணற்றடி, கணேஸ்வரம், அளவெட்டி)- ஆரம்பக்கல்வி- நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்-

சர்மிளா காசிலிங்கம் (பிடாரி கோயிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்)- ஆரம்பக் கல்வி- நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் அ.த.க. வித்தியாலயம், கோகிலவதனி இராசேந்திரம் (வட்டு. கிழக்கு, வட்டுக் கோட்டை)- ஆரம்பக் கல்வி- நயினாதீவு ஸ்ரீகணேசா வித்தியாலயம், வசந்தகுமாரி நடராசா (காஞ்சிபுரம் வடக்கு, மாதகல்)- ஆரம்பக்கல்வி- யாழ்ற்றன் கல்லூரி-

தர்சினி தேவமங்களநாதன் (சங்குவேலி வடக்கு, மானிப்பாய்) -ஆரம்பக்கல்வி- புனித மரியாள் றோ.க.த.க. பாடசாலை, குமுதினி தில்லையம்பலம்(மண்டான், கரவணாய் மேற்கு, கரவெட்டி)- ஆரம்பக் கல்வி- நெடுந்தீவு மகா வித்தியாலயம், சியாமளா சுப்பிரமணியம் (கிரவாணை ஒழுங்கை, கோப்பாய் மத்தி)- ஆரம்பக்கல்வி- மெலிஞ்சிமுனை றோ.க. வித்தியாலயம்-

பிருந்தா பரராஜசிங்கம் (சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்)- ஆரம்பக்கல்வி -எழுவைதீவு றோ.க.த.க. பாடசாலை, பிரியதர்சினி பிராங்கிளின் (நல்லாயன் வீதி, இளவாலை)- ஆரம்பக்கல்வி- நெடுந்தீவு றோ.க மகளிர் வித்தியாலயம், விஜயகெளரி சரவணை (ஆறுமுகம் வீதி, கந்தரோடை)- ஆரம்பக்கல்வி- எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம்,-

இளமதி இராஜேஸ்வரன் (மணற்பகுதி, ஆவரங்கால் கிழக்கு) - ஆரம்பக்கல்வி- அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை, உதயகலா செல்லர் (சாத்தனாவத்தை, துர்க்காபுரம், தெல்லிப்பழை) - ஆரம்பக்கல்வி- அனலைதீவு வடலூர் அ.த.க. பாடசாலை, சுஜிதா கந்தசாமி (மாறாம்புலம், அல்வாய் வடமத்தி)-ஆரம்பக்கல்வி-அனலைதீவு வடக்கு அ.த.க. பாடசாலை, யாழினி குலேந்திரராசா (சீனாப்புலம், நெல்லியடி வடக்கு )- ஆரம்பக்கல்வி- நெடுந்தீவு றோ.க.மகளிர் வித்தி, மஞ்சுளா மகேந்திரம் (கிழவிதோட்டம், கரவெட்டிகிழக்கு ) -கணிதம்- நெடுந்தீவு சீக்கிரியாம்பள்ளம் அ.த.க, தாரணி ஸ்ரீரங்கநாதன் (வியாபாரிமூலை, பருத்தித்துறை) - கணிதம்- நெடுந்தீவு றோ.க. மகளிர் வித்தி,

துர்க்கா அருணாசலம் (தாழையடி ஒழுங்கை, திருநெல்வேலி தெற்கு)-விஞ்ஞானம்- நெடுந்தீவு ம.வித்தி., ராதிகா கதிர்காமநாதன் (புத்தன் செம்பாடு, கரணவாய் வடக்கு) -விஞ்ஞானம்- நயினாதீவு ம.வித்தி, மிரிஷாயினி தேவராசா (பத்தைமேனி, அச்சுவேலி) -இந்து சமயம்- நயினாதீவு ஸ்ரீகணேசா வித்தி.,-

சங்கரப்பிள்ளை பத்மராசா (வாஸ் வீதி கோண்டாவில் கிழக்கு)- ஆரம்பக்கல்வி- நெடுந்தீவு ம.வித்தி., கெளசிகா தர்மராசா (கோட்டைக்காடு வீதி, கோண்டாவில் கிழக்கு) - ஆரம்பக்கல்வி- அனலைதீவு சதாசிவ ம.வித்தி., சுபதீபினி சுப்பிரமணியம் (நுணாவில் கிழக்கு, கண்டி வீதி)- ஆரம்பக்கல்வி- நயினாதீவு ஸ்ரீகணேசா வித்தி.,-

உசாஆனந்தி பேரானந்தன் (நாயன்மார் வீதி, நல்லூர்) -மனைப்பொருளியல்- நயினாதீவு ம.வித்தி., அருள்ஞானகொன்சி செல்லக்கண்டு (கச்சாய் வீதி, சாவகச்சேரி)- மனைப் பொருளியல்- நெடுந்தீவு ம.வித்தி., பவானி இரத்தினசிங்கம் (முருகமூர்த்தி வீதி, நவாலி கிழக்கு) -மனைப்பொருளியல்- நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட வித்தி., -

மயூரா தவலிங்கம் (பழைய தபாற்கந்தோர் வீதி, சங்கானை) -ஆரம்பக்கல்வி- நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி., வினோதினி தங்கவடிவேலு (சட்டிவளவு, புலோலி தெற்கு)- ஆங்கிலம்- புனித மரியாள் றோ.க.வித்தி., அஞ்சலா சிவகுமார் (கலைமகள் வீதி இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி)- சமூகக்கல்வி- வேலணை சேர் துரைசாமி ம.ம.வி.

***வவுனியா தெற்கு***- பரமநாதன் விஜிந்தன் (டச்சு வீதி, உடுவில்)-ஆரம்பக்கல்வி- செட்டிக்குளம் ம.வி., செல்வகுமாரி செல்வராசா (கிராம்புவில் மேற்கு, கல்வயல், சாவகச்சேரி)-ஆரம்பக்கல்வி- சிதம்பரபுரம் ஸ்ரீநாகர்ாஜா வித்தி., இராசதுரை பாலமுரளி ( கொடிகாமம் வீதி, புலோலி தெற்கு)- ஆரம்பக்கல்வி- கந்தபுரம் வாணி வித்தி.,-

கிருஷ்ணர் சேயோன் (வயிரவர் கோயில் வீதி, நெல்லியடி)-கணிதம்- வவுனியா சீ.சீ.த.க., ஆறுமுகம் வரதராஜன் (புலோலி மேற்கு, பருத்தித்துறை)-கணிதம்- செட்டிக்குளம் ம.வி., பரராசசிங்கம் கிரீசன் (அல்வாய் கிழக்கு) -கணிதம்- சிதம்பரபுரம் ஸ்ரீநாகராஜா வித்தி.,-

றகுநாயகமூர்த்தி ரதீபன் (தொல்புரம் மேற்கு, சுழிபுரம்) -கணிதம்- பாவற்குளம் கணேஸ்வரா ம.வி., சிவபாலன் சர்வேஸ்வரன் (கோண்டாவில் கிழக்கு)-கணிதம்- சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, பரம்சோதி மதன்ராஜ் (புதிய பெனடிக் வீதி, நல்லூர் கிழக்கு)-கணிதம்- பூவரசம் குளம் ம.வி.,-

சுதாஜினி சிவபாதசுந்தரம் (கந்தரோடை, சுன்னாகம்) - விஞ்ஞானம் - வவுனியா சீ.சீ. த.க, சண்முகசுந்தரம் சுரேன் (குடியிருப்பு, சுழிபுரம்) - உடற்கல்வி - பாவற்குளம் கணேஸ்வரா ம.வி, காளிதாசன் தேவகாந்தன் (குரும்பசிட்டி கிழக்கு, தெல்லிப்பழை) - உடற்கல்வி - நெளுக்குளம் கலைமகள் வித்தி.-

செல்வரத்தினம் குமரேசன் (ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி) - உடற்கல்வி - வீரபுரம் மணிவாசகர் வித்தி., சிவகுரு தீபன் (பெருங்குளம் சாவகச்சேரி) - ஆரம்பக்கல்வி - பூந்தோட்டம் ம.வி., சிவரஞ்சினி குணபாலசிங்கம் (நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்) - ஆரம்பக்கல்வி - விபுலானந்தாக் கல்லூரி,ராஜினி கந்தையா (உசன், மிருசுவில்), சங்கீதம் - நெளுக்குளம் கலைமகள் வித்தி.

**முகவரி தெரியாதோர் விவரம்:-**

தெய்வீகன் - ஆரம்பக்கல்வி - பூந்தோட்டம் ம.வி., துஷந்தன் - ஆரம்பக்கல்வி - முதலியார் குளம் றோ.க.த.க., இளையராஜா - ஆரம்பக்கல்வி - இலுப்பக்குளம் றோ.க.த.க., பற்குணநாதன் - ஆரம்பக்கல்வி - வீரபுரம் மணிவாசகர் வித்தி., சரத்பாபு - ஆரம்பக்கல்வி - விபுலானந்தாக்கல்லூரி,பத்மகாந்தன் - ஆரம்பக்கல்வி - மூன்று முறிப்பு அ.த.க.பாடசாலை, சுகந்தன் - ஆரம்பக்கல்வி - பேயாடி கூழாங்குளம் அ.த.க பாடசாலை, சுதர்சன் - ஆரம்பக்கல்வி - பேயாடி கூழாங்குளம் அ.த.க.பாடசாலை, கபிலன் - ஆரம்பக்கல்வி - விபுலானந்தாக் கல்லூரி, சுதன் - ஆரம்பக்கல்வி - நெளுக்குளம் கலைமகள் வித்தி. (1-203)

# இடம் பெயர்ந்தோர் நிவாரணம் செவ்வாய் முதல் விநியோகம்

யாழ்ப்பாணம், செப்.17

குடாநாட்டில் இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணப் பொருள்கள் விநியோகம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப் படவிருக்கிறது.

காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் 'றுகுணு' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டு ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்றும்-

அரிசி இறக்கும் பணி இன்றும் நாளையும் இடம் பெறும் என்றும்-

அதன் பின்னரே நிவாரண விநியோகம் ஆரம்பிக்கப்படும் என்றும்- அரச அதிபர் தெரிவித்தார். (1)

# சுழற்சி முறையில் மின்சாரம்

யாழ்ப்பாணம், செப்.17

நேற்றுக் குடாநாட்டில் பல பகுதிகளுக்கும் சுழற்சிமுறையில் ஒரு மணி நேரம் மின்சாரம் வழங்கப்பட்டது .

நகரப் பகுதிகளுக்கு சில இடங்களுக்கு இரவு 8 மணி தொடக்கம் 9 மணி வரைக்கும் ஏனைய சில இடங்களுக்கு 8.30 தொடக்கம் 9.30 மணிவரைக்கும் மின் விநியோகம் கிடைத்தது.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாகவே மின் விநியோகம் குறைக்கப்பட்டுள்ளது.

கிடைத்த மின்சாரத்தின் வலு குறைவாக இருந்ததாகவும், அதனால் மின்விளக்குகள் மங்கலாக இருந்ததாகவும் வீடுகளில் தண்ணீர்த் தொட்டிகளை நிரப்ப இயலவில்லை என்றும் நகரப் பகுதி பாவனையாளர்களில் பலர் முறையிட்டனர்.

## வெளிமாவட்ட கல்விசார் அலுவலருக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், செப்.17

யாழ்மாவட்டத்தில் தங்கியுள்ள வெளிமாவட்டங்களைச் சேர்ந்த கல்விசார் ஊழியர்களுக்கான ஓகஸ்ட், செப்ரெம்பர், மாத முற்பணக் கொடுப்பனவுகள் யாழ். கல்வி வலயத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

மடு, மன்னார், வவுனியாவடக்கு, வவுனியா தெற்கு ஆகிய வலயங்களைச் சேர்ந்த கல்விசார்அலுவலர்களுக்கான கொடுப்பனவுகள் நேற்று யாழ் வலயத்தில் வைத்து வழங்கப்பட்டன.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

மற்றும் இரு மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களது பட்டியல் நாளையதினமே அந்தந்த வலயங்களிலிருந்து கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும்- யாழ். வலய வட்டாரங்கள் தெரிவித்தன. (202-111)

## மட்டக்களப்பில் சாரதி சுட்டுக்கொலை

மட்டக்களப்பு,செப்.17

மட்டக்களப்பில் தேவபுரம் என்னும் இடத்தில் நேற்று முன்தினம் இரவு தென்னிந்திய திருச்சபையின் சாரதியொருவர் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதேயிடத்தை சேர்ந்த தவராசா தவநேசராசா(வயது25) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

தென்னிந்திய திருச்சபையின் முறக்கொட்டாஞ்சேனையில் உள்ள தேவாலயத்தில் இவர் சாரதியாகப் பணியாற்றி வந்தார். (1)

## ஜி.சீ.ஈ உயர்தர செயன்முறைப் பரீட்சை

யாழ்ப்பாணம், செப்.17

ஜி. சீ.ஈ உயர்தரப் பரீட்சை-2006 இற்கான செயன்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை யாழ் மாவட்டத்தில் நடைபெறவுள்ளன.

மனையியல், நடனம், சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான செயல்முறைப் பரீட்சைகள் குறிப்பிட்ட நிலையங்களில் நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும்-

ஏனைய அனைத்து ஒழுங்குகள் குறித்து யாழ் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும்-பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (202-111)

## சமாதானம் வேண்டி தினமும் கூட்டுப்பிரார்த்தனை

வடமராட்சி.செப்.17

மேலைப்புலோலி மகாவேலன் தெனி முருகன் கோவிலில் நாட்டில் சமாதானம் வேண்டி தினமும் கூட்டுப்பிரார்த்தனையும், வழிபாடும் நடைபெற்று வருகின்றது. (173)

## பழைய பூங்காவில் பெறுமதிமிக்க மரங்கள் களவாகத் தறிப்பு

யாழ்ப்பாணம், செப்.17

யாழ். பழைய பூங்கா வளாகத்தில் உள்ள பெறுமதிமிக்க மரங்கள் விறகுக்காக களவாக வெட்டப்படுகின்றன என்று அப்பகுதி வாழ் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் அரச அதிபராகக் கடமையாற்றிய வில்லியம் குவையினம் என்பவரினால் இந்த மரங்கள் நடப்பட்டது என்று நம்பப்படுபகிறது. (ப-190)

## உரும்பிராயில் சுடப்பட்ட இளைஞர்களது சடலங்களை அடையாளம் காணக் கோரிக்கை

யாழ்ப்பாணம்.செப்.17

உரும்பிராய் மூன்று கோயிலடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் சுட்டுக் கொல்லப்பட்ட இரு இளைஞர்களின் சடலங்களையும் அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவ இடத்துக்கு நேற்று சென்று விசாரணைகளை நடத்தினார்.

சடலங்கள் அடையாளம் காணப்படாததால் சடலங்களை யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்படி அவர் பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

மரணமானவர்கள் பயணித்த WPJG 9946 என்ற இலக்கமுடைய மோட்டார் சைக்கிளை கோப்பாய் பொலிஸ்நிலையத்தில் வைக்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டார்.

## சங்கக் கிளையை திறக்க ஏற்பாடு

தென்மராட்சி, செப்.17

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பன்னிரண்டாம் இலக்கக் கிளையினை மீண்டும் திறப்பதற்கு சங்க நிர்வாகத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சங்கப் பொது முகாமையாளர் கிளை அமைந்துள்ள இடத்துக்குச் சென்று அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடி கிளையினைத் திறப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ப-117)

## நிவாரணப் பணிகள் குறித்து செயலகத்தில் இன்று கூட்டம்

யாழ்ப்பாணம்.செப்.17

குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் நிவாரணப்பணிகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், கூட்டுறவுத்துறை அதிகாரிகள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

## கொழும்பில் காணாமற்போனோரை தேடி அறிவதற்கு குழு அமைப்பு

கொழும்பு, செப்.17

வடக்கு - கிழக்கு மற்றும் தலைநகர் கொழும்பு பகுதிகளில் காணாமற்போகும் தமிழர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக 'காணாமற்போனவர்களைத் தேடியறியும் அமைப்பு' என்ற குழுவை இடதுசாரி முன்னணி அமைத்துள்ளது.

தமிழர்கள் கடத்தப்படுவது மற்றும் காணாமற்போவது தொடர்பாக இடதுசாரி முன்னணி விடுத்திருக்கும் செய்திக் குறிப்பு ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் காணாமற்போனவர்கள் தொடர்பாக இந்த அமைப்புடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். காணாமல் போனவர்கள் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபைக்கு அறிவிப்பதுடன் இந்த நிலைமைக்கு எதிராகப் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. தயவுசெய்து காணாமற்போனவர்கள் தொடர்பாகவும் அநாவசிய கைதுகள் தொடர்பாகவும் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

ஜெ.தயாளன், இயக்குநர், 'காணாமற்போனோரை தேடியறியும் குழு', 143/3, கியூ வீதி, கொழும்பு-02. தொ.பே.இல. 2430621, 077 3124533 அல்லது கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன, போஷகர், 'காணாமற்போனோரை தேடியறியும் குழு', 143/3, கியூ வீதி, கொழும்பு-02. தொ.பே.இல. 0777 237241

- இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்ள கியூபா சென்றிருந்த நாடுகளின் தலைவர்கள் இணைந்து எடுத்துக் கொண்ட படம் இது.

# மாவு இருந்தும் மின்சாரம், விறகு இன்மையால் பாண் உற்பத்தியைத் தொடரமுடியாத நிலை

## பேக்கரி உரிமையாளருக்குச் சங்கடம்

யாழ்ப்பாணம்,செப்.17

கோதுமை மா கிடைத்தும் மின்சாரம், விறகு இன்மையால் பாண் உற்பத்தியை மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் பாண் உற்பத்தியில் ஈடுபட்டுவரும் பேக்கரிகளில் சில நவீனமயப்படுத்தப்பட்டு மின்சாரத்தின் உதவியுடன் பாண் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றன. இன்னும் சில பேக்கரிகள் தொடர்ந்தும் விறகைப்பயன்படுத்தி பாண் உற்பத்தியில் ஈடுபடுகின்றன.

கடந்த மாதம் ஏ-9 வீதி மூடப்பட்டதை அடுத்து, குடாநாட்டுக்கு அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துவரப்படுவது தடைப்பட்டது. இதனால் குடாநாட்டில் அத்தியாவசிய உணவுப்பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டதுடன், பாண் உற்பத்திக்கு கோதுமை மாவைப் பெறுவதிலும் பேக்கரிகள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டன.

இந்த நிலையில், கப்பல்மூலம் எடுத்துவரப்பட்ட கோதுமை மா குடாநாட்டில் உள்ள பேக்கரிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. இதனையடுத்து பாண் உற்பத்தி தடங்கல் இன்றித் தொடர்ந்தது.

எனினும், கடந்த சில தினங்களாக குடாநாட்டில் மின் விநியோகம் சீரற்று இருப்பதை அடுத்து பாண் உற்பத்தியை மேற்கொள்ள முடியாதிருப்பதாக பேக்கரிகளை நவீனமயப்படுத்தி - மின்சாரத்தை பயன்படுத்தி பாண் உற்பத்தியில் ஈடுபடும் பேக்கரி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தம்மிடம் உள்ள ஜெனரேற்றர்களைப் பயன்படுத்தி பாண் உற்பத்தியில் ஈடுபடலாம் என நினைத்து அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தபோதிலும் குடாநாட்டில் எரிபொருளுக்கு குறிப்பாக டீசலுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக ஜெனறேற்றர்களை இயக்கமுடியாதிருப்பதாகவும்.-

அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதற்கிடையில்- விறகினைப்பயன்படுத்தி பாண் உற்பத்தியில் ஈடுபடுவோரும், தற்போது விறகினைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமம் எதிர் கொள்ளப்படுவதாகவும்-

இதனால், பாண் உற்பத்தியைத் தொடர முடியாதிருப்பதாகவும்- கூறுகின்றனர்.

பாண் உற்பத்திக்கான விறகினைப் பெற முயற்சிக்கிறோம். எனினும், மின்சாரமின்மையால் இரவில் பாண் தயாரிப்பு நடவடிக்கைகளுக்கு வெளிச்ச வசதி இல்லாமல் உள்ளது. மண்ணெண்ணையை ஓரளவு கூடுதலாகப் பெற்றுக்கொள்ள யாழ்.அரச அதிபர் நடவடிக்கை எடுத்தால் தடங்கலின்றி பாண் உற்பத்தியைத் தொடர முடியும்-

என்று நல்லூர் பகுதியில் விறகினைப் பயன்படுத்தி பாண் உற்பத்தியில் ஈடுபடும் பேக்கரி ஒன்றின் உரிமையாளர் தெரிவித்தார்.

இதற்கிடையில்- மின்சாரத்தின் உதவியுடன் பாண் உற்பத்தியில் ஈடுபடும் மற்றொரு பேக்கரியின் உரிமையாளர்:-

''ஒரு வாரத்திற்கு போதுமான டீசல் மட்டுமே கையிருப்பில் உள்ளது. அதுவரையில் பாண் உற்பத்தியை தடங்கலின்றித் தொடரமுடியும். டீசலைப் பெற்றுக்கொள்ள உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (111-79)

## எமது நாட்டில் உள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை என்பது,பயங்கரவாதத்தைப் போன்றதல்லாமல் ஆக்கபூர்வமானதும் மனித வலுவுடைதுமானதாகும். அதிகாரக்கட்டமைப்புக்களை ஒருபுறத்திலும் சமூக கட்டமைப்புகளை மறு புறத்திலும் முன்னேற்றகரமாக முன்னெடுத்துச் சென்று புதிய இலக்குகளை அடைவதற்கான மனிதப் பண்பு கொண்ட மார்க்கமே விடுதலைப் போராட்டம். ஆனால், ஒப்பீட்டளவில் பயங்கரவாதம் ஓர் அழிவுச் சக்தியாகும். அதாவது மனிதாபிமானமற்ற ஒரு செயற்பாடாகும் அதனை எந்த விதத்திலும், எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. எமது நாட்டு மக்கள் கடந்த பலவருடங்களாக, வெறுக்கத்தக்க பயங்கர செயல்களில் ஈடுபடும் இரக்கமற்ற பயங்கரவாதக் குழு ஒன்றின் கைகளினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

தற்கொலைத்தாக்குதல், கண்ணிவெடித் தாக்குதல், படுகொலைகள், கண்மூடித்தனமான ஆயுதத்தாக்குதல்கள், சிறுவர்களை பலவந்தமான படைகளுக்கு திரட்டுதல் ஆகிய நடவடிக்கைகளில் அக்குழு ஈடுபட்டு வருகின்றது.

அவர்கள் அரசியல் தலைவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள், மற்றும் தங்கள் நோக்கங்களுக்கும் கருத்துக்களுக்கும் இணங்காதவர்களையும், அங்கீகரிக்காதவர்களையும் தீர்த்துக்கட்டுவதில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்தக்குழுவுடன் பேச்சுக்களில் ஈடுபடும் முயற்சிகளில் எனது அரசு உட்பட அடுத்தடுத்து பதவியில் இருந்த ஸ்ரீலங்கா அரசுகள் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு இதுவரை மேற்கொண்ட சகல முயற்சிகளும் தோல்வியடைந்துள்ளன.

அளவு மீறிய ஆத்திரமூட்டலின் மத்தியிலும் நாம் இந்தக்குழுவை ஜனநாயக அரசியல் வழிக்கு கொண்டுவருவதற்காக, சமாதான வழியில் ஈடுபடுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

அணிசேரா அமைப்பும், ஐ.ந.ா அமைப்பும் பயங்கரவாதம் எங்கே இருந்தாலும் எப்பொழுது எழுந்தாலும் அதனை இல்லாதொழிப்பதற்கு தமது ஈடுபாட்டையும் பங்களிப்பையும் நல்கி, அதற்கான நவீன, புதுமையான வழிமுறைகளை வகுக்கவேண்டும் என்று அழைப்பு விடுக்கிறேன்.

அதேவேளை, நாடுகளின் அரசுகளுக்கும் இறையாண்மைக்கும் ஆள்புல ஒற்றுமைக்கும், அரசியல் மற்றும் பொருளாதார விருத்திக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ள பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கான ஆக்கபூர்வமான புதிய வழிமுறைகளை எல்லோரும் சேர்ந்து கண்டறிவது அவசியமாகும் - என்றார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

## தியாகி திலீபனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாடுகளிலும் தியாகி திலீபனின் நினைவு தினம் நேற்று முன்தினம் ஆரம்பமாகின.

இந்திய - இலங்கை அரசுகளின் செயற்பாடுகளை எதிர்த்தும் தமிழ்மக்களின் உரிமைகளை வலியுறுத்தியும் நீராகாரம் கூட எடுக்காமல் உண்ணாவிரதப் போராட்டத்தை நல்லூர் ஆலயமுன்றிலில் தியாகி திலீபன் ஆரம்பித்த நினைவுதினம் என்பது தெரிந்ததே.

## கடல்வழிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரைவழிப்பாதையைத் திறந்து மக்களுடைய போக்குவரத்துக்கு வழிசெய்யப்படவேண்டும் என்று விடுதலைப்புலிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

தரைவழிப்பாதையை திறப்பதற்கு தாம் தயாராக இருப்பதாக சர்வதேச சமூகத்திற்கும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவருக்கும் விடுதலைப்புலிகள் தெரிவித்து வருகின்றனர்.

ஸ்ரீலங்கா அரசு தனது படை நலனில் அக்கறை கொண்டு மக்களை கேடயமாகப் பயன்படுத்தி கடல்வழி படைப்போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றது. மக்களுடைய பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு கடல்வழி போக்குவரத்து எதனையும் மேற்கொள்ள வேண்டாம் என்று தமிழீழ அரசியல்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது என்று அதில் உள்ளது.

## வரணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தவர்களான சிதம்பரநாதன் காராளசிங்கம் (வயது 52), அவரது மனைவியான தவலோகநாயகி (வயது 51) மற்றும் பாலசுந்தரம் ஞானசேகரன் (வயது 20) ஆகியோரின் சடலங்களே மீட்கப்பட்டன.

அசம்பாவிதங்களின் போது மக்கள் இடம் பெயர்ந்து சென்ற வேளையே இவர்கள் உயிரிழந்தனர். அதனால் இவர்களின் சடலங்கள் அப்பகுதியில் அவசரமாகப் புதைக்கப்பட்டன.

புதைக்கப்பட்ட சடலங்கள் நேற்று மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கையின் பின்னர் நல்லடக்கம் செய்யப்பட்டன.

எறிகணை வீச்சுக்களினால் அப்பகுதியில் 12 பொதுமக்கள் வரை உயிரிழந்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ-12)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்துமயானத்தில் புதைக்கப்பட்டிருந்த மேற்படி 17 பணியாளர்களது சடலங்களில் இரண்டு நேற்றுக்காலை மூதூர் மற்றும் திருகோணமலை மேலதிக நீதிவான் வசந்த தினசேனவின் முன்னிலையில் தோண்டி எடுக்கப்பட்டன.

ரகசியப் பொலீசாரின் வேண்டுகோளுக்கு அமைய இந்த சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டன என்றும் -

தோண்டியெடுக்கப்பட்ட சடலங்கள் இரசாயனப்பகுப்பாய்வுக்கென கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன என்றும் - திருமலைச் செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் ஏனைய 15 பணியாளர்களது சடலங்களையும் தோண்டியெடுப்பதற்கு மூதூர் மற்றும் திருகோணமலை மேலதிக நீதிவான் நேற்று அனுமதி வழங்கினார்.

தொண்டு நிறுவனப்பணியாளர்களது படுகொலை வெளிநாடுகளின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளமையும் - ஊழியர்களின் சடலங்களை இரசாயனப்பகுப்பாய்வுக்கு உட்படுத்த ஆஸ்திரேலிய நிபுணர்களின் உதவி பெறப்பட்டுள்ளமையும் தெரிந்ததே.

# மொறட்டுவ பல்கலைக்கு மேலும் 9 மாணவர் தெரிவு

கொழும்பு, செப். 17

மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறிக்கு (என்.டி.ரி.) மேலும் 9 மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் எதிர்வரும் '19ஆம் திகதிக்கு முன்னதாக தமது பதிவுகளை உறுதிப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட மாணவர்கள் 0112650064 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொலைநகல் மூலம் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

* ஏ.ஏ.நெவின் - 27, மார்ட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
* எஸ்.ளளளராகுலன் - நெல்லியோடை, திக்கம், அல்வாய்.
* எஸ்.சாமினி - 3ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை.
* எஸ்.சிந்துஜா - 'கமலாவாசம்', கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
* எஸ்.சேந்தன் - 50/1/2, ரெம்பிலஸ் ரோட், கல்கிஸை.
* பி.சதீஸ்குமார் - பிள்ளையார் கோயிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.
* ஜே.சுபாஸ்கர் - 207/2, திருவையாறு, கிளிநொச்சி.
* கே.கஜனி - சிற்றி தோட்டம், கரணவாய் தெற்கு, கரவெட்டி.
* கே.ஐங்கரன் - 48 உருத்திரா மாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பு - 06.
* எஸ். ஜெனகன் - வட்டபதி ஒழுங்கை, புலோலி மேற்கு, பருத்தித்துறை.

(ஐ-12)

# சாவகச்சேரி ச.கடைகளில் சீனி விநியோகம்

தென்மராட்சி, செப்.17

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைக் கடைகளில் பங்கீட்டு அட்டைக்கு ஒரு கிலோ வீதம் சீனி வழங்கப்பட்டு வருவதாக சங்கப் பொது முகாமையாளர் ச.யோகராசா தெரிவித்தார்.

சங்க எல்லைப்பரப்பில் உள்ள குடியிருப்பாளர்கள் அருகில் உள்ள கிளைக் கடையில் பங்கீட்டு அட்டையைச் சமர்ப்பித்து ரூபா 68 விலையில் ஒரு கிலோ சீனியினைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவித்துள்ளார்.

(ப-117)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நாவின் உப நிறுவனங்கள் என்பன அந்தப் பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆள்கள் காணாமற்போவது, கொலை செய்யப்படுவது தொடர்பாக விசாரணை நடத்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக்குழு பக்கச் சார்பின்றி செயற்படும் - என்றும் ஜனாதிபதி, ஐ.நா. செயலரிடம் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகள் மூலமே இலங்கையில் அமைதியை ஏற்படுத்த முடியும் என்று தெரிவித்த ஐ.நா. செயலர், அதற்கு சர்வதேச சமூகம் முழு ஒத்துழைப்பு வழங்கும் என்றும் கூறினார். (ஐ-12)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org